981

உ

# மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 1.] 1922௵ நவம்பர்௴ 1௳ [பகுதி 10

இந்த அமராவதி யென்னும் நாவல்
ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

18 DEC 1922
MADRAS

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது.

1922

காபிரைட்] [ரிஜிஸ்டர்ட்.

# மனமோகினி

## ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில்ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை ஆரம்பித்திருக்கின்றோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது முதலில் மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் வெளியாய் வருகிறது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. இதற்குச் சந்தாதாரராகச் சேர்வோருக்கு இரண்டரை ரூபாய்க்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்களை அடைதலும், சிரமமின்றி ஒவ்வொரு மாதத்திலும் வாசித்து வந்து ஒரு வருஷத்தில் இரண்டு புத்தகங்களை முடித்தலுமாகிய சௌகரியங்கள் கிடைக்கும். இதன் முதற் சஞ்சிகை 1922௵ பிப்ரவரி௴ 1உ வெளியாய்விட்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக்கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2 8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதினால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

**மானேஜர்: "ஆனந்த நிலையம்"**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

பம் வைக்கும் சமயம் துளசிபாய் அவர் பின்னால் நின்று குனிந்து அவர் எழுதுவதைக் கவனிப்பவள்போல் அபிநயித்து "கையொப்பம் கை நடுக்கமின்றிச் சரியாய் எழுதுங்கள்" என்று கூறிக்கொண்டே பக்கத்தில் இருந்த ஒயின் கிண்ணத்தில் தன் கையிலிருந்த சிறு புட்டியிலுள்ள திராவகத்தை யூற்றிவிட்டாள்.

வைத்தியர் பத்திரத்தில் கையொப்பம் வைத்தபின் அதை யப்புறம் வைத்தார். சண்பகம் "வைத்தியரே! இன்னும் தங்கள் ஆயாசம் தீரவில்லை. இன்னும் கொஞ்சம் ஒயின் அருந்திவிட்டுச் சிற்றுண்டி யருந்துங்கள்" என்று கூறினாள். துளசிபாய் உடனே தான் மருந்து ஊற்றியிருக்கும் கிண்ணத்தில் நிறைய ஒயினை விட்டு வைத்தியரிடமளித்தாள். வைத்தியர் அதை யருந்தினார். ஆனால் கிண்ணத்தைக் கீழே வைக்கும்போதே அவர் முகத்தில் ஒரு வித மாறுதலுண்டாயிற்று. அவர், "ஆ! இதென்ன எனக்குண்டாயிருக்கும் உணர்ச்சி. ஓ! பாஷாணம்! சண்டாளிகளே! எனக்கு விஷமிட்டீர்கள். இதனால் க்ஷேமமடையீர்கள்" என்று கூறிக்கொண்டே தான் எழுதிய நற்சாட்சிப் பத்திரத்தை யெடுக்கக் கைநீட்டினார். அதற்குள் கற்பகம் அதைத் தூரத் தள்ளிவிட்டு வைத்தியரை நாற்காலியில் தள்ளினாள். மறுநிமிடம் வைத்தியர் சவமானார்.

அத்துடன் மாதர்கள் உடனே ஆலோசனைசெய்து சவத்தை யெடுத்துப்போய்த் தங்கள் தந்தையின் சவத்தருகிலிருந்த நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு "வைத்தியர் திடீரென்று மாரடைத்துக்கொண்டு மரித்தார்" என்று மாரியாயியிடம் கூறினார்கள். மாரியாயி நடந்த சம்பவத்தைக்கண்டு பிரமிப்படைந்தாள். ஆனால் அவள் அம்மாதர் கூறியதை நம்பினாளென்றாவது, உண்மையை

600 008



186483

யுணர்ந்தாளென்றுவது அவள் முகக்குறியால் விளங்க வில்லை.

கற்பகம் மாரியாயியைநோக்கி "பிரபு இறந்த சங்க தியை யிப்போதே மாளிகையிலுள்ளோர்க்கு அறிவிக்க வேண்டிய அவசியமில்லை. நோயாளி யிறந்ததை யருகில் இருந்து கண்ட வைத்தியர் உடனே மனப்பதைப்பால் இறந்துவிட்டார் என்று கூறவேண்டும். நீ கதவைத் தாளிட்டுக்கொண்டு இங்கேயே உள்ளேயிரு. நாங்கள் சீக் கிரத்தில் வருகிறோம்'' என்று கூறினள்.

உடனே மூன்று சகோதரிகளும் அங்கிருந்து புறப் பட்டு அவர்கள் சம்பாஷிக்கும் அறைக்கு வந்தபோது நகரத்திலுள்ள குரு, இவர்கள் ஆள்மூலமாக வரும்படி கூறியதால், அங்கு வந்திருந்தார். அக்குரு உள்ளத்தில் எத்தகைய பாதகத்தொழிலுக்கும் அஞ்சாத அயோக்கி யன். பணத்திற்கு எதையும் செய்யத்தக்கவன். அத் தகைய குருவே இத்தகைய பெண்பேய்களின் அக்கிரமச் செயல்களுக்குத் தக்க உபகரணமானவன். கற்பகம் குருவைநோக்கி "இப்போது நடக்கும் இதே நாழிகையில் தாங்கள் மூன்று கலியாணச் சடங்குகளைச் செய்துமுடிக்க வேண்டும். நாங்கள் மூன்றுபேருமே மணம் செய்து கொள்ளப்போகிறவர்கள். மணமகன்கள் நிலவறைக்கிடங் கில் இருக்கிறார்கள். தாங்கள் தயவுசெய்து அந்த விடத் திற்கு வந்து அங்குதான் சடங்குகளை முடிக்கவேண்டும். தங்களுக்களிக்கும் பரிசு தக்கதாக விருக்குமென்பதைப் பற்றி நான் கூறவேண்டியதில்லை'' என்றாள். குரு "தங் கள் கட்டளைப்படிசெய்ய ஆயத்தமாகவிருக்கிறேன்'' என் றார். சங்கதி இரகசியமாக இருக்கவேண்டு மென்றுவது, முக்கியமாகக் கிடங்கிற்குள் செல்லும் வழி முதலியவற்றை மிக்க இரகசியமாக வைக்கவேண்டு மென்றுவது ஒன்றும்

குருவுக்குக்கூறவில்லை. ஏனெனில் பிராணபயத்தாலும் கிடைக்கும் பரிசாலும் குரு ஒருவரிடமும் இவைகளைப் பிரஸ்தாபிக்க மாட்டார் என்று சகோதரிகள் அறிவார்கள்.

அங்கிருந்து சகோதரிகள் குருவையும் காப்டன் உருத்திரப்பனையும் அழைத்துக்கொண்டு மேல்தளத்திற்கு ஏறினார்கள். அங்கிருந்து முதல் கற்பகம் நாற்காலியில் உட்கார்ந்துகொள்ள காப்டன் ஒரு பிரகாசம் பொருந்திய தீபத்தைக் கரத்தில் எடுத்துக்கொண்டு கூடவே இறங்கினான். கீழே சேர்ந்ததும் கற்பகம் தீபத்தை யெடுத்துக் கொண்டு ஜனரல் உக்கிரசேனர் இருக்கும் அறையை நோக்கிச்சென்றாள். காப்டன் நாற்காலியோடு மேல் சென்றான். அவ்வாறே பிறகு சண்பகமும், அதன் பிறகு துளசி பாயுமாய்க் கீழிறங்கி ஒவ்வெருவரும் ஒவ்வொரு தீபத்தைக் கரத்திலெடுத்துக்கொண்டு அவரவர்கள் காதலித்த ஆளிருக்கும் அறையை நோக்கிச் சென்றார்கள்.

காப்டன் மறுபடி மேலேறிக் கடைசித் தடவையாகக் குருவை யழைத்துக்கொண்டு கிடங்கிற்குள் இறங்கினான். இம்முறை தீபமில்லை. கீழிறங்கியதும், கலியாணச்சடங்கு நடக்கும் வேளைவருமட்டும் அவரைத் தன்னருகிலேயே யிருக்கும்படி கூறினான். ஆகையால் இருவரும் நாற்காலியிருக்குமிடத்திலேயே இருந்தார்கள். இச்சமயத்தில்தான் பிரேமநாதனும் வீரரத்னம்பிரபுவும் கடற்கரையில் இருந்து கோட்டையின் மேல் தளத்தில் தீபவொளியைக் கண்டார்கள். இனி இம்மூன்று சகோதரிகளும் தங்கள் காதலர்களைக் கண்டுபேசுவதைப்பற்றி நாம் கூறவேண்டும். முதலாவது யாவர்க்கும் சிறியவளாகிய துளசிபாயின் நடக்கையைப்பற்றிக் கவனிப்போம்.

துளசிபாய் உலகநாயகன் இருக்கும் அறைக்குச்

சென்று தீபத்தைக் கீழே வைத்து விட்டு அவனை நோக்குள். அவன் ஏதோ துயரமான யோசனையிலிருப்பவன் போல் காணப்பட்டான். துளசிபாய் அவனுக்கும் தனக்கும் இடையிலிருக்கும் கம்பிகளினருகிற்சென்று மிக்க அன்பும் இரக்கமுமான பார்வையாக அவனை நோக்கி "இப்போது நான் எப்போதும் சந்தோஷமாயிருக்கத் தக்க விடையை யளிக்கப்போகிறீரோ அல்லது என்னை யென்றும் துயர்க்கடலில் ஆழ்த்தும் விடை யளிக்கப் போகிறீரோ? இதை முடிவாயறியவே நான் இப்போது வந்தேன்'' என்றாள்.

உலகநாயகன்:—நீ உண்மையாகவே என்னைக்காதலிக்கிறாயா?

துளசிபாய்:—ஆ! நான் உம்மைப் பூரணமாய்க்காதலிக்கிறேன். இத்தகைய கம்பீர உருவமும் நாகரீகமும் வீரமுமுடைய புருடனை எவ்வாறு காதலிக்காமலிருப்பது?

உலகநாயகன்:—இப்படி யிருந்தும் நான் எனக்குப் பிரியமில்லை யென்றால் என்னைக்கொன்று விடுவதாய்க் கூறினாய்.

துளசிபாய்:—அந்தோ! நான் என்ன செய்வேன்? நான் இக்கட்டான கடின சந்தர்ப்பத்தால் கட்டுப்பட்டிருக்கிறேன். இப்போது நடக்கும் இந்த நாழிகைக்குள் நாங்கள் மூவரும் மணம் புரிந்து கொள்ளவேண்டும். இதற்கு யார் சம்மதிக்கவில்லையோ அவர்கள் உடனே கொல்லப்பட வேண்டுமென்று என் சகோதரிகள் தீர்மானித்துவிட் டிருக்கிறார்கள். நான் அதற்கு மாறாய் நடக்கலாகாது. ஆனால் நீர் மறுக்கமாட்டீரல்லவா? மறுத்தால் நான் மிக்க துயரடைவேன். தயவு செய்து ஒப்புக்கொள்ளும். சீக்கிரம் கூறும்.

என் மனம் பெரிய வேதனையிலிருக்கிறது. கூறும்! கூறும்!!

உலகநாயகன்:—"உன் போல் பிரகாசம் பொருந்திய முக விலாசமுடைய ஒரு அழகிற் சிறந்த மாதின்மேல் காதல் கொள்ளவில்லையெனின், நான் மனிதஜன்மமா யில்லை யென்றே கூறவேண்டும். ஆனால் மனைவிக்குத் துரோகம் செய்யலாகாதென்ற ஒரு காரணமே இது காறும் என்னைச் சம்மதிக்கவிடாது தடுத்தது. ஆனால் விதியில்லை. நீ எப்படிச் சந்தர்ப்பத்தால் கட்டுப்பட்டு இப்படிக் கூறியதாக இயம்பினையோ, அவ்வாறே நானும் இப்போது இக்கட்டான சந்தர்ப்பத்தில் சிக்கியிருப்பதால் இதற்குச் சம்மதிப்பதாகக் கூறவேண்டி யிருக்கிறது. ஆம் துளசிபாய்! நான் உன்னைக் காதலிக்கிறேன். ஓ! என் காதல்!" என்று கூறிக்கொண்டே கம்பிகளின் ஓரத்தில் வந்து அவள் முன் முழங்காலிட்டுப்பணிந்தான்.

துளசிபாய் உலகநாயகன் தன் மேல் மெய்யாகவே காதல்கொண் டிருக்கிறானென்று உள்ளத்தில் மிக்க சந்தோஷமடைந்து அவன் தன் கரத்தைப்பற்றி முத்தமளிக்கும்படி தனது வலது கரத்தை யுள்ளே நீட்டினாள். உலகநாயகன் ஆவலோடு அக்கரத்தைப்பற்றிக்கொண்டான். ஆனால் அவள் எதிர்பார்த்தபடியல்ல. அவன் அவள் கரத்தைப்பற்றியதும் சட்டென்று தன் ஜேபியிலிருந்து, ஆயத்தமாகச் சுருக்குப் போட்டிருந்த கயிற்றை யெடுத்து அவள் கணுக்கையில் மாட்டி இழுத்து விட்டதும், மறைத்து வைத்திருந்த ஈட்டியை யெடுத்து அவள் மார்புக்கு நேராய்க்காட்டி "ஒருவார்த்தை கூறினால், சத்தமிட வாயைத்திறந்தால், உடனே உன் பிராணன் போய்விடும். இது சத்தியம்" என்றான்.

துளசிபாய் நாவுலர்ந்து பேரிடிவிழுந்தவள் போல் திகைத்து மரம்போல் ஆய்விட்டாள். உலகநாயகன் உடனே அவள் தோளை இரும்புக்கம்பியில் கட்டிவிட்டுக் கூரிய ஈட்டியை அவள் மார்பிற்கருகில் வைத்துப்பிடித்துக்கொண்டு "பத்திரம்; வாய்திறந்தால் கட்டாயம் கொன்று விடுவேன்" என்முன்.

இவளை யிங்கேயே விட்டு விட்டுச் சண்பகத்தைக் கவனிப்போம். அவள் மேஜர் இலக்ஷ்மணன் அறைக்குள் சென்றதும் அவனை நோக்கி "கலியாணம் நடக்கவேண்டிய சமயம் நெருங்கிவிட்டது. உமது வாக்குத்தத்தம் அப்படியே யிருக்கிறதா மாறி விட்டதா?" என்முள்.

இலக்ஷ்மணன்:—"என் வாக்குத்தத்தம் ஒரு போதும் மாருது. ஆனல் கலியாணம் நடந்ததே நானும் என் சகோதானும் விடுதலை யடைவோம் என்ற உன் வாக்குத்தத்தம் அப்படியே நடக்குமா? என்பதே நான் அறியவேண்டியது" என்முன்.

சண்பகம்:—மணம் முடிந்ததே நான் கூறியபடி கட்டாயம் நடக்கும். அதன்பின் தாங்களும் தங்கள் சகோதரரும் இதுகாறும் இங்கு நடந்த விஷயங்களையும், கண்டவிஷயங்களையும் மறந்து விடுவதாய் வாக்களித்திருக்கிறீர்கள்.

இலட்சுமணன் :—கட்டாயம் அப்படியே நடக்கும்; எனக்கு என்ன கோபமிருந்த போதிலும் நீ என் மனைவியானபின் உனக்கு அகெளரவம் உண்டாகும்படி நான் செய்தால் எனக்கும் அது அவமானமேயன்றி வேறில்லை யென்பதை நான் உணராத மூடனல்ல. என் சகோதரன் என் பிரியப்படி நடப்பான். ஆனல் நீ யெனக்கொரு சத்தியம் செய்து கொடுக்கவேண்டும். அதாவது மணம் செய்துகொண்டபின் என்

னைத் துரோகம் செய்யலாகாது. அப்படி யெனக்கு அவமானத்தை யுண்டாக்குவதாயின் அதைவிட இப்போதே நானும் என் சகோதரனும் இருவரும் எங்கள் பிராணனைத் துரும்பாய் மதிப்போம்'' என்ருன்.

சண்பகம் தனக்குள் உண்டான அளவுகடந்த சந்தோஷத்தை யடக்கிக் கொண்டு, இதோ அப்படியே சத்தியம் செய்து கொடுக்கிறேன் என்று கம்பிகளின் ஓரத்தில் முழங்காற்படியிட்டு அவன் கூறியபடி சத்தியம் செய்தாள். இலக்ஷ்மணன் அடங்கா மகிழ்ச்சியடைந்தவன் போல், ''ஆ சண்பகம் என் மனதார உன்னைக் காதலிக்கிறேன். இப்போது நீ கூறியவற்ருல் எனக்குண்டான ஆனந்தமிருக்கிறதே'' என்று கூறிக்கொண்டே தன்னை மறந்து அவளை யாலிங்கனம் செய்துகொள்ளப் பாய்ந்து செல்பவன்போல், இருகரங்களையும் விரித்துக்கொண்டு தாவினுன். சண்பகம் சந்தோஷமிகுதியால் ஆத்திரத்தோடு தன் இருகரங்களையும் கம்பிகளுக்கிடையில் நீட்டினுள். தன் கரங்கள் பற்றப்பட்டதை யுணர்ந்தாளேயன்றி, அவள் பார்வை இலக்ஷமணனுடைய முகத்தின்மேலேயே இருந்தபடியால் தன் கரங்களை யவள் பார்க்கவில்லை. இலக்ஷ்மணன் நொடிக்குள் அவளுடைய இருகரங்களையும் கயிற்ருல் கட்டிவிட்டுத் தோட்களைக் கம்பிகளில் கட்டிவிட்டு ஈட்டியை யெடுத்துக்காட்டி உலகநாயகன் துளசிபாயைப் பயமுறுத்திச் சத்தமிடாது செய்ததுபோல் செய்து விட்டான். ஆனல் இவளுடைய இருகரங்களும் கட்டப்பட்டன. கோபம், வெட்கம், திகில் யாவும் சேர்ந்து அவள் முகத்தில் மிக்க பயங்கரமான விகாரத்தை யுண்டாக்கி விட்டன. வாயைத்திறந்தால் கட்டாயம் உயிர் போய் விடும்போ லிருக்கிறது. என்ன செய்வாள்? மிரள மிரள விழித்துக்கொண்டு மௌனமாக விருந்தாள்.

## 53-வது அத்தியாயம்

ஜனரல் உக்கிரசேனரும் கற்பகமும்—திடுக்கிடும் சம்பவங்களும் சாமார்த்தியச் செயல்களும், சிறைவைத்தவர்கள் சிறையாதல்—ஜெனரல் உக்கிரசேனர் முதலியோர் சுயாதீனமடைந்தார்கள்—பெருந்தன்மையான செய்கைகள்.

---

இனி ஜனரல் உக்கிரசேனன் அறையில் என்ன நடக்கிறதென்று கவனிப்போம். கற்பகம் தீபத்தை யெடுத்துக் கொண்டு அறைக்குள் சென்று தீபத்தைவைத்துவிட்டு உள்ளறையை நோக்கினுள். ஜனரல் கரங்களை மார்பின்மேல் கட்டிக்கொண்டு தலைகவிழ்ந்தபடி சிந்தனையிலிருந்தவராகக் காணப்பட்டார். சற்றுநேரஞ் சழித்தே கற்பகத்தை நோக்கினர்.

கற்பகம்.—இப்போது நான் இங்கு வந்த காரணம் தெரியுமோ? நடக்கிற இந்த நாழிகைக்குள் நமது கலியாணச்சடங்கு முடியவேண்டும். ஒன்று நீர் என்னை மணந்து கொள்ளவேண்டும். இன்றேல் இதே நாழிகையில் மரணமடைய வேண்டும்.

ஜனரல்:—ஆ! இவ்வளவிற்கு வந்து விட்டதா? சரி. நான் சம்மதிக்காவிட்டால் எத்தகைய மரணம் எனக்குக் கிடைக்கும்? அதை யறிந்த பின் நான் விடையளிப்பேன்.

கற்பகம்:—என் ஆட்களில் ஒருவன் இங்கு வந்து நின்று துஷ்டமிருகங்களைச் சுடுவதுபோல் கம்பிகளின் வழியாக உம்மைச் சுட்டுவிடுவான்.

ஜனரல்:—எத்தகைய சூரனுயினும் பசியாலும் நாவரட்சி

யாலும் வேதனைப்படுவது சகிக்கொணு விஷயமே யென்று எனக்குத் தெரிகிறது. சற்று ஆலசியம் செய்ய, ஒருநாள் இரண்டு நாட்கள் பொறுக்க முடியாதா?

கற்பகம்:—ஒரு மணி நேரம் கூட ஆலசியம் செய்யமுடியாது.

ஜனரல்:—வயது முதிர்ந்த கிழவியாவது அவலட்சணம் பொருந்தியவளாவது, நாகரீகமற்ற காட்டுமிராண்டியாவது ஒருவனைக் காதலித்தால் அவளை யவன் நிராகரித்துவிடலாகும். கம்பீரம் பொருந்திய உருவமும், மிக்க உயர்தரமான அழகு வாய்ந்த முகாரவிந்தமுமுடைய ஒருமாது நம்மைக்காதலித்தால், அவள் என்னதான் முரட்டுத்தனமாகவும் இரக்கமற்ற விதமாகவும் நடந்துகொண்டாலும், எப்படி மறுக்க முடியும்?

கற்பகம் இவன் இணங்கிவிட்டானென்று உள்ளத்தில் சந்தோஷமடைந்து, "சீக்கிரம் உமது முடிவான தீர்மானத்தைக் கூறும். குருவந்து காத்துக்கொண் டிருக்கிறார்" என்றாள்.

ஜனரல்:—"ஒரு திரண்டசேனை செய்யமுடியாத வேலையை நீ செய்து முடித்தாய். இது உனக்கு மிக்க கௌரவமே. ஆனால் ஒன்று; நான் சம்மதித்தால் என் தோழனாகிய மேஜர் இலக்ஷ்மணன் கதியென்ன?" என்று கூறிக்கொண்டே கம்பிகளின் அருகில் சென்றார்.

கற்பகம்:—குரு இங்குவந்து நமது கலியாணச்சடங்கு முடிந்ததும் தங்கள் நண்பன் இருக்கும் அறைக்குச் செல்ல வேண்டியது. அவர் முன்னமே சம்மதித்துவிட்டார். உடனே சண்பகத்திற்கும் அவருக்கும் மணமுடிக்க

வேண்டியது. பிறகு துளசிபாய்க்கும் உடனே மணம் நடந்துவிடும்.

ஜனரல்:—"சரி. இன்னும் ஒரு சங்கதி கேட்கவேண்டும். அதற்குத் திருப்தியான விடை கிடைத்தால்தான் நான் சம்மதிப்பேன். இன்றேல் உடனே யுன்னிஷ்டப்படியே செய்யலாம்" என்று கூறிக்கொண்டே கம்பிகளின் அருகில் சென்று அவற்றின்மேல் சாய்ந்து கொண்டு "நான் எந்த விஷயத்திலும் அரைகுறையாகப் பிரவேசிக்கமாட்டேன். உன்மேல் எனக்குப் பிரியமுண்டாகாத வரையில் உன்னிடத்தில் வெறுப்பாகவும் கோபத்தோடும் பேசினேன், வைதேன்; அல்லவா? அவ்வாறே உன்னை மணம்புரிந்து கொண்டால் இதுகாறும் நீ செய்த கொடுமைகளும் இரக்கமற்ற செயல்களும் யாவும் அடியோடு மறக்கப்பட வேண்டும். ஆகையால் நீ உண்மை விசுவாசமும், மன ஒற்றுமையும், என்னைத் துரோகம் செய்யாத சத்திய நெறியுமுடைய மனைவியாக இருப்பாயா என்பதை யுன்மன சாக்ஷிக்கு உண்மையாகக் கூறவேண்டும்" என்றார்.

இப்போது கற்பகம் கம்பிகளுக்கு வெளிப்பக்கம் மிக்க சமீபத்தில் உட்கார்ந்திருப்பதால் ஜனரலுக்கு ஓரடி தூரத்திலேயே யிருக்கிறாள். ஜனரல் கூறிய மேற்படி மொழிகளைக்கேட்டதே முன்னமே அவரை மணம்புரிந்து கொண்டது போன்ற சந்தோஷம் அவளுக் குண்டாகிவிட்டது. ஆகையால் அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டே "ஓ! தடையின்றி யவ்வாறேயிருப்பேன். நான் இவ்வாறு நடந்து கொண்டதனாலேயே தாங்கள் எனக்கு அன்பிராதென்று கருதலாகாது..." என்று கூறிக்கொண்டே யிருக்கையில், காட்டுமிருகம் வைக்கப்பட்டிருக்கும் கூண்டிற்கு

மிக்க சமீபத்தில் யாரேனும் அஜாக்கிரதையாக நெருங்கி அதன் உருவத்தைப் பார்த்துக்கொண்டே யிருக்கையில் அது எப்படி இமைகொட்டுமுன் தன் கரத்தை வெளி யில்விட்டு அவர்களைப்பற்றி இழுத்துக்கொள்ளுமோ, அது போல், ஜனரல் உக்கிரசேனர் தம் கரத்தைக் கம்பிகளுக் கிடையில் விட்டுக் கற்பகத்தின் வலதுகை மணிக்கட்டைப் பற்றி அக்கரம் முழுமையும் உள்ளே யிழுத்துக்கொண்டு இடையிலிருந்த கூரிய ஈட்டியை யெடுத்து அவள் மார் பிற்கருகில் பிடித்துக்கொண்டு "ஒரு வார்த்தை உன் வாயி லிருந்து வந்ததோ, செத்தாய். பிறகு எது எப்படியாயி னும் சரி, கூச்சலிட முயல்கிறுயென்று தெரிந்தால் உடனே கட்டாயம் கொன்றுவிடுவேன். இது நிச்சயம்" என்று கூறி, ஈட்டியை வாயில் கடித்துக்கொண்டு அவள் தோளை இரும் புக் கம்பியில் கட்டிவிட்டார். அவள் பிரமித்துத் திகி லடைந்து விழிக்கத்தொடங்கினள். அவள் மனதில் மரண பீதி யதிகமாகிவிட்டது. பிறகு ஜனரல் மறுபடி ஈட்டி யைக் கரத்தில் பற்றி அவள் இருதயத்திற்கு நேராக நீட் டிக்கொண்டு, "பத்திரம் பத்திரம்; பேசாமல் உன் மடியி லிருக்கும் சாவியை யெடு! சீக்கிரம்! இன்றேல் உடனே உன்னைக் கொன்றுவிட்டு உன் உடையிலிருக்கும் சாவியை யெடுத்துக்கொள்வேன்" என்றார்.

கற்பகம்:—மெதுவாக "ஆ சாவியா?" என்றாள்.

ஜனரல்:—"ஆம். இந்த அறைகளை யெல்லாம் திறக்கும் ஒரே சாவி. அது உன்னிடத்திலேயே யிருக்கிறது. சீக்கிரம் எடு" என்றார்.

அம்மாது நடுக்கத்தோடு "என்னைக் கொல்லமாட் டீரே?" என்றாள். ஜனரல் "சே! உன்னைப்போன்ற அற்பப்பிராணியைக் கொல்வதால் எனக்கென்ன பயன். உன் துஷ்டகாரியங்களுக்குத் தக்க தண்டனையை யனுப

விக்க நீ யின்னும் உலகிலிருக்கவேண்டும். சாவியை யெடு; இனிப் பேசாதே" என்றார்.

கற்பகம் உடனே சாவியை யெடுத்துக் கொடுத்து விட்டாள். ஜனரல் கம்பிகளினிடையில் கரத்தைவிட்டுப் பூட்டைத் திறந்து வெளிவந்ததும் கற்பகத்தை யங்கேயே விட்டு வெளிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு "பத்திரம் சொல்ப சத்தம் போட்டாயோ, திரும்பி வந்ததும் கட்டாயம் கொன்றுவிடுவேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளிச்சென்றார். உடனே இலக்ஷ்மணன் உலகநாயகன் இவர்களிடம் செல்லலாமென்று நினைத்தார். கற்பகம் சிக்கிக்கொண்டதுபோல் சண்பகம், துளசி இவர்களும் சிக்கிக்கொண்டிராவிட்டால் தன்னைக் கண்டதே பெருங் கூச்சலிடுவார்கள். அதனால் கீழே யிறங்கியிருக்கும் நாற்காலி மேலுக்கு இழுத்துக்கொள்ளப்படும். ஆகையால் இருட்டிலேயே மெதுவாய்ப் பூனைபோல் மேலிருந்து இறங்கும் துவார மிருக்குமிடத்தை நோக்கிச் சென்றார். அங்கு இருட்டில் இருவர் குசுகுசுவென்று பேசும் சத்தம் கேட்டது. அச்சத்தம் வரும் திக்கை நோக்கிச் சென்று அங்கிருக்கும் இருவரையும் நெருங்கியதும் திடீலென்று ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து முன்னே கைக்கு அகப்பட்டவனைப் பிடித்துத் தரையில் மோதி வீழ்த்தினர். அவன் காப்டன் உருத்திரப்பனே. ஜனரல் உடனே இரண்டாவது மனிதனாகிய குருவையும் அவ்வாறே தரையில் வீழ்த்தினர். ஆனால் அதற்குள் காப்டன் சமாளித்தெழுந்து மேல்தளத்திற்குச் செல்லும் துவாரத்திற்கு நேரில் சென்று நின்று உரத்த சத்தமாய் "உதவி உதவி, கைதிகள் வெளி வந்துவிட்டார்கள்" என்று கூவினன்.

மறு விநாடி ஜனரல் அவனைப் பிடித்து மறுபடி மிக்க பலமாக மோதித் தரையில் வீசினர். இம்முறை யவன்

எழுந்திருக்க முடியாமல் பரிதபித்தான். காப்டன் போட்ட கூச்சலால் மேலே இருந்த ஆட்கள் நாற்காலியை மேலுக் கிழுத்துக்கொண்டார்கள். ஜனரல் பார்த்தார்; நடந்த சங்கதி நடந்துவிட்டது. அதைப்பற்றி யோசிப்பதில் பயனில்லை யென்று தீர்மானித்து, அங்கு காலியாக விருந்த இரண்டறைகளைத் திறந்து காப்டனை ஒரு அறையிலும் குருவை யொரு அறையிலும் இழுத்துக்கொண்டு போய்ப் போட்டுக் கதவுகளை மூடிப் பூட்டிக்கொண்டு கற்பகம் இருக்கும் அறைக்குச் சென்று தீபத்தை யெடுத்துக் கொண்டு, மேஜர் இலக்ஷ்மணன் அறைக்கும், உலகநாயகன், இராமநாதன் இவர்கள் இருக்கும் அறைகளுக்கும் சென்று அவர்களை விடுதலை செய்துவிட்டு, துளசிபாயையும், சண்பகத்தையும் அவரவர்கள் கட்டப்பட்டிருந்த அறைகளிலேயே விட்டுக் கதவுகளை மூடிப் பூட்டிக்கொண்டார்.

* * * * * * * *

இனிக் கோட்டைக்குள் நுழைந்த பிரேமநாதன் முதலியவர்களைப் பற்றிக் கவனிப்போம். முதல்வாயிலிலிருந்த இரண்டு மூன்று காவலர்களும், அங்குள்ள காவலறையிலிருந்த பனிரண்டு பேர்களும் ஆயுதங்களை யளித்துவிட்டுப் பணிந்துவிட்டார்கள். கேசவன் பிரேமநாதனிடம் கூறியபடி ஆயத்தமாக அங்கு இருந்தான். இப்போதவன் முன்வந்து வீரரத்னம் பிரபுவுக்குத் தாழ்மையாக வந்தனமளித்து நின்றதே பிரேமநாதன் "பிரபுவே! இந்த உத்தமனே நமக்கு இவ்வளவு உதவிக்கும் மூலகாரணமாகவிருப்பவன். இவன் உதவியின்றேல் நமது காரியம் நிறைவேறியிராது. இனி நடக்கவேண்டியவற்றை இவன் யோசனைப்படிக்கே நாம் செய்யவேண்டும்" என்றான்.

பிரபு அவ்வாறே சந்தோஷத்தோடு சம்மதித்ததும் கேசவன் அவரை நோக்கி, "பிரபுவே! மொத்தம் காவலர்

ஐம்பது பேர்களில் பதினைந்து பேர் இங்கே அகப்பட்டுப் பணிந்துவிட்டார்கள். இன்னும் முப்பத்தைந்து பேர்களே யுள்ளர். தாங்கள்மட்டும் அவர்கள் எதிரில் வந்து நின்றீர்களோ அவர்கள் உடனே திகிலடைந்து பிராணபத்திலிருந்து தப்பினுற் போதுமென்று பணிந்துவிடுவார்கள். அவர்கள் சுபாவத்தை நான் நன்கறிவேன்'' என்றான்.

வெளிவாயிற்படியிலிருந்து தூரத்திலுள்ள கிடங்கினருகிலிருக்கும் அறைகளில் அக்காவலரிருக்கின்றார்கள். இங்கு நடக்கும் எவ்வித சத்தமும் அவ்வளவு தூரத்தில் கேளாது. ஆகையால் உள்ளேயிருக்கும் ஆட்களுக்கும் வெளிவாயிலில் நடந்த சங்கதி யொன்றுமே தெரியாது. அவர்களில் சுமார் பத்துப்பேர் சாராய வகைகள் இருக்கும் அறையில் உட்கார்ந்து வேடிக்கையாகக் குடித்துக்கொண்டிருக்கிறார்கள். மூன்று நான்குபேர் போசன அறையில் உணவருந்திக்கொண் டிருக்கிறார்கள். நான்குபேர் பாதாள கிடங்கின் மேல் தளத்தில் நாற்காலி யிருக்குமிடத்திலிருக்கிறார்கள். மீதியிருந்தவர்கள் தங்கள் தங்கள் அறைகளுக்குச் சென்று சயனித்துக் கொண்டார்கள். பிரேமநாதன் அழைத்துவந்த ஆட்களில் பத்துப்பேர் வெளிவாயிலிலிருக்கும் ஆட்களுக்குக் காவலாக வைக்கப்பட்டார்கள். மீதியிருந்தவர்கள் இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பாகத்தைப் பிரேமநாதனும், மற்றொருபாகத்தை வீரரத்னம் பிரபுவுமாக நடத்திக்கொண்டு உள்ளே சென்றார்கள். பிரபு தன் ஆட்களோடு சாராயம் இருக்கும் அறைக்கும், பிரேமநாதன் தன் ஆட்களோடு மற்றொரு அறைக்கும் சென்றார்கள். வீரரத்னம் தன் ஆட்களோடு திடீலென்று அறைக்குள் நுழைந்ததே அவனைக் கண்ட ஆட்கள் பிரம்ம இராக்ஷசனைக் கண்ட மனிதர்போல் பேரிடிவிழுந்தவர்களாய்ப் பிரமித்தார்கள். பிரபுவின் கூடவந்த ஆட்களில்

ஒருவன் "பேசாமல் ஆயுதத்தைக் கொடுத்துவிட்டுப் பணிந்துவிடுவோர் மன்னிப்புப் பெறுவார்கள். கலகத்திற்கு முயலுவோர் பிராணனை யிழப்பார்கள்" என்றான். உடனே அவர்களனைவர்களும் வணங்கிவிட்டார்கள்.

பிரேமநாதன் சென்ற அறையில் அவனும் ஆட்களும் நுழைந்ததே அவன் கூடச்சென்ற கேசவன் அங்கிருந்தவர்களை நோக்கி "என் நண்பர்களே! நமது சொந்த எஜமானராகிய வீரரத்னம் பிரபு வந்துவிட்டார். அதோ அந்த அறையிலிருக்கிறார். மாதர்களின் அநீத அதிகாரம் ஒழிந்தது. நீங்கள் பேசாமல் இணங்கிப் பணிந்துவிட்டால் மன்னிப்புப் பெறுவீர்கள்" என்றான். உடனே அவர்களனைவரும் பிராணன் தப்பினாற் போதுமென்று ஆயுதங்களைக் கொடுத்துவிட்டுப் பணிந்துவிட்டார்கள்.

இந்த ஆட்களனைவரும் ஒரு அறையில் சேர்க்கப்பட்டார்கள். பிரேமநாதனுடைய ஆட்களில் பெரும்பாலார் அவர்களுக்குக் காவலாக வைக்கப்பட்டார்கள். கேசவன் பிரபுவை நோக்கி "பிரபுவே! நாம் இப்போது ஆலசியமின்றி மேல்தளத்திற்குச் சென்று பாதாள அறையில் சிறையாக்கப்பட்டிருப்போரை மீட்கவேண்டும்" என்றான்.

இதைக் கேட்டதே பிரேமநாதன் மிக்க சந்தோஷமடைந்து "ஆ! என் அன்பார்ந்த எஜமானை மீட்கவேண்டும்" என்றான்.

வீரரத்னம் கேசவனை நோக்கி "என் சகோதரிகள் எங்கே யிருக்கிறார்கள்?" என்றான். கேசவன் "பிரபுவே! பெரும்பாலும் இச்சமயம் அவர்கள், தாங்கள் அன்னியரை அக்கிரமமாக அடைத்துவைத்திருந்த சிறையில் தாங்களே அடைக்கப்பட் டிருக்கவேண்டும்" என்றான். பிரேமநாதன், வீரரத்னம் பிரபு, கேசவன் மூவரும் ஐந்தாறு ஆட்களை யழைத்துக்கொண்டு மேல்தளத்திற்கு ஏறி நாற்காலி

யிருக்கும் இடத்தருகிற் சென்றார்கள். அச்சமயந்தான் கீழேயிருந்து காப்டன் உருத்திரப்பன் போட்ட கூச்சலைக் கேட்ட அங்கிருந்த ஆட்கள் நாற்காலியைத் துரிதமாக மேலிழுத்துக்கொண்டு ஆத்திரத்தோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

வீரரத்னம் பிரபு அவர்கள் முன்பு சென்று நின்றதும் "அட துஷ்டர்களே! உடனே யுங்கள் ஆயுதங்களை யளித்துவிட்டு மன்னுப்புக் கேட்டுக்கொள்கிறீர்களா? அல்லது மரணதண்டனை யடைகிறீர்களா?" என்றார். அந்த ஆட்கள் வாய் பேசமுடியாமல் பிரமித்து ஆயுதங்களை யளித்துவிட்டார்கள். அவர்கள் உடனே பிரேமநாதன் ஆட்களில்ர்சில வசம் கீழேயிருக்கும் ஒரு அறைக்கு அனுப்பப்பட்டார்கள். பிரேமநாதன் அப்போதுதான், தான் பாதாளகிடங்கின்மேல் கண்ட தீபத்தின் விஷயம் இன்னதென்றும் அத்தீபம் தோன்றும்போது என்ன நடக்கிறதென்றும் உணர்ந்தான்; நாற்காலியை முதல்தடவையாகக் கண்டான்.

கேசவன் கீழ்நோக்கிச் செல்லும் துவாரத்தில் குனிந்து "மேலே நண்பர்கள் இருக்கிறோம்" என்று கூறினன். உடனே "இங்கே யெல்லாம் அனுகூலமாய் விட்டன. நாற்காலியை விடு" என்று ஜனரல் உக்கிரசேனருடைய பலம்பொருந்திய குரலொலி கேட்டது. உடனே நாற்காலி விடப்பட்டது. ஜனரல் தன் சுபாவகுணப்படி, உலகநாயகன், இலக்ஷ்மணன், இராமநாதன் மூவரையும் ஒவ்வொருவராக மேலே யேற்றி யனுப்பிவிட்டபிறகு கடைசியாகவே தாம் மேலேறி வந்தார். ஆ! வேலைக்காரனும் எஜமானும் சந்தித்தபோதும், சகோதரனும் சகோதரனும், சந்தித்தபோதும் ஜனரல் உக்கிரசேனன் தன்னைக் காப்பாற்ற எதற்கும் துணிந்து விடாமுயற்சி யெடுத்துக் கொண்ட தன் ஆளையும், தான் புத்திரவாஞ்சை கொண்

டிருந்த உலகநாயகனையும் கண்டபோதும் இவர்களுக்குள் உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை. வீரரத்னம் பிரபு ஜனரல் உக்கிரசேனரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிருரேயன்றி இதுதான் அவர் அவரை நேரில் கண்ட முதல் தடவை. ஆகையால் மிக்க ஆவலோடு அவர் கரத்தைப்பற்றிக்கொண்டு மிக்க நல்வரவுகூறித் தன் மாளிகைக்குள், அதிலும் தன் சகோதரிகளால், அவருக்கு நேரிட்ட துன்பத்திற்காகத் தான் மிக்க துயருறுவதாகக் கூறினர்.

இவர்களுடைய சந்தோஷம் சற்று தணிந்த பின் வீரரத்னம் பிரபு ஜனரலை நோக்கி "என் சகோதரிகள் எங்கேயிருக்கிருர்கள்?" என்ருர். ஜனரல் "அவர்கள் இப்போது கட்டப்பட்டிருக்கவில்லை. ஆனல் தனித்தனி அறைகளில் சிறையாக இருக்கிருர்கள். அந்தக் காப்டென் உருத்திரப்பனும் சிறையாகவே யிருக்கிருன். குருவும் ஒரு அறையில் அடைக்கப்பட்டிருக்கிருன்" என்ருர்.

வீரரத்னம் பிரபு "அந்த உருத்திரப்பன் என் துஷ்ட சகோதரிகள் கையில் ஓர் கொடிய ஆயுதமாகச் சிக்கினன். அவனுக்கு மரண தண்டனையே தகுதியானது. அவன் சிறையிலேயே யிருக்கட்டும். அக் குருவை மட்டும் அழைத்து வாருங்கள்" என்ருர்.

கேசவன் அவ்வாறே சென்று குருவை யழைத்து வந்தான். குரு மேலே வந்ததும் "பிரபுவே! என்னை மன்னிக்கவேண்டும்" என்று அவர் முன் முழங்காலிட்டுப் பணிந்து கெஞ்சினன்.

வீரரத்னம் பிரபு குருவை நோக்கி "சீ சீ! உன் முகத்தில் விழிக்கலாகாது. நீ இக்குரு பதவிக்கே அருகனல்ல. இந்த வினடிமுதல் உன் அயோக்கிய நடக்கைகளுக்காகக் குரு பதவியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிருய். நீ சீக்கிரத்

தில் இத்தீவை விட்டுப் போய்விடவேண்டும். இதுவே யுனக்குக் குறைந்த தண்டனை; போ வெளியில்'' என்றார்.

குரு தலை குனிந்தபடி சென்றான். பிரபு கேசவனை நோக்கி "இனி நீ உன் ஆட்களில் சிலரை யிட்டுக்கொண்டு போய் என் சகோதரிகள் மூவரையும் அழைத்து வந்து அவர்கள் அறையில் விட்டுக் காவல்வை.'' என்று கூறி விட்டு, ஜனரலை நோக்கி,

"என் துஷ்ட சகோதரிகளுக்கு என்ன தண்டனை விதிக்கலாமென்பதை நீங்களும் உங்கள் நண்பர்களுமே தீர்மானிக்கவேண்டும். ஏனெனில் நீங்கள் அவர்களால் மிக்க கஷ்டத்தை யனுபவித்திருக்கிறீர்கள்'' என்றார்கள்.

ஜனரல் உக்கிரசேனர் "பிரபுவே! நாங்கள் ஸ்திரீகளின் மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்கிறவர்களல்ல. அவர்கள் எடுத்துக்கொண்ட பிரமாதமான முயற்சிகளனைத்தும் கடைசியில் அடியோடு தோல்வியடைந்து அவர்கள் அடைந்த பெரிய அவமானமே அவர்களுக்குத் தக்க தண்டனை யாகும்'' என்றார். மேஜர் இலக்ஷ்மணன் உலகநாயகன் முதலியவர்களும் ஜனரலின் தீர்மானத்தையே ஆமோதித்தார்கள்.

வீரரத்னம் பிரபு:—ஜனரல்! தங்களுடையவும் தங்கள் நண்பர்களுடையவும் பெருந்தன்மையும் உதாரகுணமும் மிகவும் புகழத்தக்கவையாகும். ஆனால் என் துஷ்டச் சகோதரிகள் நாளைக் காலையில் ஒரு கப்பலிலேற்றப் பட்டு மலை நாட்டிலுள்ள நமது மாளிகை யொன்றில் கொண்டுபோய் வைக்கப்படவேண்டும்'' என்று கூறி விட்டு, அதற்குத்தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி சங்கரனுக்குக் கட்டளையிட்டார்.

ஜனரல் உக்கிரசேனர் பிரபுவை நோக்கி, "பிரபுவே! மற்ற விஷயங்களைவிட ஒரு முக்கியமான விஷயம் தங்க

ளுக்குக்கூற எண்ணியிருக்கிறேன். அதாவது, இதோ விருக்கிறானே கேசவன், இவனைத் தாங்கள் ஒரு நண்பனைப் போல் கவனித்து இவனுக்குத்தக்க சன்மானம் செய்ய வேண்டும். நாங்களனைவரும் அக்கிரமமான மரணத்தி லிருந்து தப்பியதற்கும், இப்பாதாளக்கிடங்கிலிருந்து விடு தலை யடைந்ததற்கும், உங்கள் துஷ்ட சகோதரிகளின் ஆழ்ந்த அக்கிரமமான சூழ்ச்சி ஈடேறாமல், தாங்கள் இப் போது ஆபத்தின்றித் தங்கள் மாளிகைக்குள்வந்து அதிகா ரம் செலுத்த நேர்ந்ததற்கும் இந்த உத்தமனே முதற்கார ணம். இவன் கடைசிவரையில் துரோகம் செய்யாமல் நியா யத்திற்கு உதவி செய்தான். நான் என் சிறைச்சாலையி லிருந்து வெளியிலிருந்த என் கையாளாகிய பிரேமநாதன் என்ற இந்த வீரத்தன்மையும் அன்புமுடைய வாலிபனோடு ஆலோசனை செய்வதற்கு இவனே தூதாளாக விருந்தான். தங்கள் சகோதரிகளைப் பயமுறுத்தி நாங்கள் சிறையி லிருந்து வெளிவருவதற்கு அவசியமாக வேண்டியிருந்த கயிறுகள் ஈட்டிகளை யிவனே கொண்டுவந்து உதவினான். அடைபட்டிருந்த நாங்கள் ஆலோசனை செய்வதற்கும் ஒரு வர் கருத்தை யொருவர் அறிவதற்கும் இவனே உதவியா யிருந்தான். மிக்க முக்கியமானது ஒன்று—அதாவது— எனக்கு முதலில் அரை ஆகாரமும் பிறகு இன்னும் குறை ந்த ஆகாரமும் கொடுக்கப்பட்ட போதும், பிறகு இரண்டு நாட்கள் எவ்வித உணவும் கொடுக்கப்படாமல் விடப் பட்ட போதும், இவ்வுத்தமனே எனக்குப் போதுமான ஆகாரத்தை இரகசியமாகக் கொண்டு வந்து கொடுத்து என் தேகபலம் குன்றிவிடாமற் செய்தான். ஆகையால் இத்தகைய உத்தமனைத் தாங்கள் மறவாமல் மனதில் வைத்து இவனுக்குப் பூரண அன்புகாட்ட வேண்டும். தனக்கு என்ன ஆபத்து நேரிட்டாலும் நேரிடட்டுமென்று

துணிந்து எவ்வளவோ சிரமமெடுத்துக் கொண்டு என்னை மீட்டுக்கொண்டு போக முயற்சி செய்த என் ஆளாகிய பிரேமநாதனுக்குத் தக்க சன்மானமளிப்பது என் கடமை. அது உங்களனைவரின் முன்னிலையிலேயே அளிக்கப்படும்'' என்றார்.

வீரரத்னம் "ஜெனரல்! இப்போது நாம் முதலில் செய்யவேண்டிய வேலை தேக சுகமின்றி யிருக்கும் பரிதாபமான என் தந்தையைக் காணவேண்டியதே. அந்தோ! வியாதியால் தேகபலமும் மனோபலமும் மிகக்குன்றி யிருக்கும் அவரை இத்துஷ்ட சகோதரிகள் சுலபமாக ஏமாற்றித் தங்கள் விருப்பப்படி செய்யுமாறு செய்துவிட்டார்கள். தாங்களும் தங்கள் நண்பர்களும் தயவுசெய்து என் கூட வந்தால் உங்களை யவருக்கு அறிமுகமாக்கி வைக்க மிக்க ஆவலுடையவனா யிருக்கிறேன்'' என்றான்.

ஜனரல் உக்கிரசேனன் வீரரத்னம் பிரபுவை நோக்கி "பிரபுவே! தங்கள் தந்தையின் அறிமுகத்தைப்பெற நாங்கள் மிக்க சந்தோஷமுடையவர்களாகவே யிருக்கிறோம். அங்கு செல்லுமுன் ஒருவிஷயம். அதாவது என் ஆளாகிய பிரேமநாதனுக்கு உங்களனைவர் முன்பும் தக்க பரிசளிப்பதாக இப்போது கூறினேனல்லவா. அதை யிங்கேயே யளித்துவிட்டு உடனே தங்கள் தந்தையைக்காணச் செல்வோம்'' என்று கூறிவிட்டுப் பிரேமநாதனை நோக்கி "பிரேமநாதம்! இப்படி அனைவர் முன்னும் வந்து முழங்காற்படியிட்டு வணங்கு'' என்றார்.

எஜமான் கட்டளைப்படி நடக்கும் குணமுடைய பிரேமநாதன் தட்சணம் அவ்வாறே செய்தான். ஜனரல் உடனே அருகிலிருந்த ஒருவன் வாளை வாங்கிக்கொண்டு அதை உயரத்தூக்கி, அங்கிருந்த அனைவரையும் நோக்கி "நான் இவனுக்கு உங்களனைவரின் முன்பாகப் பரிசளிப்ப

தாகக் கூறினேனல்லவா, இதோ அளிக்கிறேன் கவனியுங்கள்'' என்று கூறிவிட்டுக் கடவுளைப் பிரார்த்தித்து,

"அரசரால் எனக்களிக்கப்பட்ட இராஜப்பிரதிநிதியென்ற உயர்பதவின் அதிகாரத்தாலும், இலவணபுரி எல்லைக்கப்புறம் உலகின் எப்பாகத்திலும் அரசருக்கு இரண்டாவதாக அதிகாரம் செலுத்தும்படி யளிக்கப்பட்ட அனுமதியாலும் உன் வீரத்தனத்தை நேரில் கண்ட இங்குள்ள இவர்கள் முன்பாக உனக்குச் சுத்தவீரன் என்ற பட்ட மளிக்கிறேன்'' என்று கத்தியால் அவன் முதுகைத் தொட்டு எழுந்திரு என்றார்.

பிரேமநாதன் அடைந்த சந்தோஷமிகுதியால் தன் நன்றியறிதலை யுடனே வெளியிட முடியாமல் சற்று நேரம் திகைத்து நின்றான்.

---

## 54-வது அத்தியாயம்.

வீரரத்னம் பிரபு உண்மையறிதல்—பெருந்தன்மையான நடக்கைகள்—சகோதரிகள் மலைநாட்டிற்குக் கப்பலேற்றப்படல்—வீரரத்னம் பிரபு அரசனுதல்—எதிர் பாராத சம்பவங்கள்—சகோதரிகளின் மோசச் செயல்கள்—கலகம்.

---

மேற் கூறப்பட்ட சடங்கு முடிந்த பின் வீரரத்னம் பிரபு, ஜனரல் உக்கிரசேனர், மேஜர் இலக்ஷ்மணன், இராமநாதன், பிரேமநாதன், கேசவன் இவர்களனைவரும் மேகநாதம் பிரபு இருக்கும் அறையை நோக்கிச் சென்றார்கள். அங்கு சென்றதும் வீரரத்னம் பிரபு கதவைத்திறக்க முயன்றபோது உட்பக்கம் தாளிடப்பட்

டிருப்பதையுணர்ந்து "யார் உள்ளே?" என்றார். மாரி யாயி "யாரது?" என்றாள். பிரபு "நான் வீரரத்னம் பிரபு; கதவைத்திற உடனே" என்றார். அம்மாது அதைக்கேட்டுத் திடுக்கிட்டபோதிலும், "ஒருவரையும் உள்ளே வர விடாமல் நீ இங்கேயேயிரு. நாங்கள் வந்தாலன்றித் கதவைத்திறவாதே" என்று சகோதரிகள் கூறிய கட்டளையை நினைத்து "ஆ பிரபுவே! மெதுவாய்ப் பேசுங்கள். பிரபு நித்திரை செய்கிறார்" என்றாள்.

வீரரத்னம் "நான் அவர் நித்திரைக்குப் பங்கம் செய்யமாட்டேன். அவருக்கு எல்லாச் சௌகரியங்களும் சரியாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா வென்றறியவேண்டும். கதவைத்திற சீக்கிரம்" என்றார்.

மாரியாயி—"பிரபுவே! யார்வரினும் கதவைத் திறக்க வேண்டாமென்று சீமாட்டிகள் கண்டிப்பான கட்டளை யிட்டிருக்கிறார்கள்" என்றாள்.

வீரரத்னம் அங்கில்லாத காலங்களில் வயோதிகரான தந்தையைக் கைவசப்படுத்திக்கொண்டு அம்மூன்று சகோதரிகளும் அத்தகைய பூரண அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தார்கள். அதோடு கோட்டைக்குள் நடந்திருக்கும் விசேட சம்பவங்கள் ஒன்றும் மாரியாயிக்குத் தெரியாது. ஆகையால் அவ்வாறு கண்டிப்பாய்க் கூறினாள். அதைக் கேட்ட வீரரத்னம் பிரபுவின் முகத்தில் பெரிய மாறுதலுண்டாயிற்று. அவர் ஜனரல் முதலியவர்களை நோக்கி "நண்பர்களே! ஏதோ பெரிய விபரீதம் நடந்திருப்பதாகத் தெரிகிறது" என்று கூறிவிட்டுக் கோபத்தோடு கதவைத்தட்டி "ஓ மாதே! திற கதவைச்சீக்கிரம். உன் சீமாட்டிகளுக்கு அத்தகைய எதிரற்ற அதிகாரம் இங்கு எப்போதும் கிடையாது. சீக்கிரம் திற. இன்றேல் கதவு உடைக்கப்படும்" என்றார்.

இதைக்கேட்டதே மாரியாயி பெருந்திகிலடைந்து நடுநடுங்கிவிட்டாள். சகோதரிகளின் அதிகாரம் ஒழிந்த தென்று உணர்ந்து உடனே கதவைத்திறந்து விட்டாள்.

உள்ளே நுழைந்தவர்கள் அங்கிருந்த அகோரக்காட்சி யைக்கண்டதும் திடுக்கிட்டலறி ஓரடி பின்னிடைந்தார் கள். எத்தகைய கொடிய யுத்தத்திலும் பிராணபத்திலும் கூடத் திடுக்கிடாத ஜனரல் உக்கிரசேனரே திடுக்கிட்டு இரண்டொரு நிமிடங்கள் மரம்போல் அசைவற்று நின்று ரெனின் மற்றையர் நிலைமையைப்பற்றி விவரித்துக்கூற வேண்டியதே யில்லை.

வீரரத்னம் பிரபு தன் தந்தை யிறந்திருப்பதைக்கண் டதே அவர்கள் மதாசாரப்படி அவரருகில் முழங்காற்படி யிட்டுக் கடவுளைப் பிரார்த்தனை செய்து விட்டெழுந்ததும் மாரியாயியைக் கோபத்தோடு நோக்கி,

"ஏ மாதே! இதென்ன கோரக்காட்சி? இந்த மர ணங்களின் விவரமென்ன?" என்றார்.

அம்மாது பெருந்திகிலடைந்து விட்டாள். உண் மையை நடந்தபடி கூறினால் எங்கே நாமும் உடந்தையாக விருந்ததாய்ச் சிக்கிக்கொள்வோமோ என்று அவள் மன தில் பெரிய பிராணபயம் உண்டாகிவிட்டதால் வாய் திறக்க முடியாமல் மிரள மிரள விழித்தாள்.

**வீரரத்னம்**:—"ஏ ஸ்திரீயே! நடந்த சங்கதி யென்ன? உண்மையைக்கூறு. எதையேனும் மறைத்தாயோ உன் பிராணனை வாங்கிவிடுவேன். உண்மை கூறினால் தப்புவாய். மிக்க அற்பப்புழுப் போன்ற உன்மேல் வஞ்சந்தீர்த்துக்கொள்ளக் கருதேன். மெய்கூறினால் உன்னை மன்னித்தேவிடுவேன். என் தந்தை எப் போது மரணமடைந்தார்?" என்றான்.

**மாரியாயி**:—"ஒன்பதே கால் மணிக்கு" என்றாள்.

வீரரத்னம்:—"ஆ! இப்போது பனிரண்டுக்கு மேலாயிற்று. இருக்கட்டும். இந்த வைத்தியர் இங்கு மரித்திருக்கும் கதை யென்ன?" என்றான்.

மாரியாயி:—பிரபுவே! தங்கள் தந்தை யிறந்ததே தங்கள் சகோதரிகள் மூவரும் வைத்தியரிடம் ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும் என்று கூறி அவரைத் தங்கள் அறைக்கு அழைத்துச்சென்றார்கள். சுமார் அரைமணி நேரத்திற்குள் அவர்களே அவர் சவத்தை யிங்கு தூக்கிவந்து, இப்படி நாற்காலியில் வைத்தார்கள். பிரபு இறந்து போகும்போது கிட்டவிருந்து பார்த்த வைத்தியர் அம்மரணக்காட்சியில் பீதியடைந்து இறந்து விட்டாரென்று கூறும்படி எனக்குக் கட்டளை யிட்டார்கள்" என்று நடந்த சங்கதி யாவும் தானறிந்தமட்டில் கூறிவிட்டாள்.

வீரரத்னம் பிரபு குறிப்பாய் ஜனரல் முதலியவர்களை யுற்றுநோக்கி விட்டு மாரியாயியை நோக்கி "வைத்தியரின் சவத்தை வேறு அறைக்குக் கொண்டுபோகச் செய்து அதுவும் ஒழுங்கின்படி அடக்கம் செய்யப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்செய்," என்று கட்டளையிட்டு விட்டு யாவரையும் அழைத்துக்கொண்டு மூன்று சகோதரிகள் முன்பு உணவருந்திக்கொண்டிருந்த அறைக்குச்சென்றார். அங்கு மேஜைமேல் பலகாரங்கள், பழங்கள், ஒயின் முதலிய சாராயவகைகள் யாவும் வைக்கப்பட்டிருந்தன. அங்கு அனைவரும் உட்கார்ந்ததும் வீரரத்னம் பிரபு அவர்களை நோக்கி,

"நண்பர்களே! நடந்த சம்பவங்கள் இன்னவையென எனக்கு நன்கு விளங்குகின்றன. என் தந்தை இறந்து விட்டதால் என் சகோதரிகளின் நோக்கம் நிறைவேறுவதற்கில்லை. அவர் மரணத்திற்கு முன்பே இவர்கள்

மூவரும் ஒரே வேளையில் மணம் புரிந்து கொண்டால்தான் அந்த நிபந்தனை நிறைவேறும். ஆதலால் இவர்கள் எங்கள் தந்தை இரந்ததை மறைத்து வைத்துத் தங்கள் மணத்தை முடித்துக்கொண்டு, அதற்குப்பின் அவர் இறந்ததாய்ப் பிரஸ்தாபிக்கக்கருதி யிருக்கிறார்கள். அதன்படி எப்படி யோ தந்திரமாக வைத்தியரை வசப்படுத்த முயன்றார்கள். அந்த வைத்தியர் சத்தியவான். ஆதலால் அவரால் உண்மை வெளி வந்து விடுமென் றெண்ணி அவரைக்கொன்று விட்டார்கள். இவ்வளவே நடந்த சங்கதி. நான் என் சகோதரிகளை மன்னிக்கவெண்ணி யிருந்தேன். இப்போது எப்படி அவ்வாறு செய்வதென்பது எனக்கு விளங்கவில்லை. நண்பர்களே! நீங்கள் இதைப்பற்றி என்ன அபிப்பிராய மளிக்கிறீர்களோ அதன்படி நடக்கத் தீர்மானித்து விட்டேன்.'' என்றார்.

ஜனரல் உக்கிரசேனர் ''பிரபுவே! உன் சகோதரிகளுக்கு மரணதண்டனை விதியென்று ஒரு சகோதரனுக்குக்கூறுவது மிக்க பரிதாபமான விஷயம். அவர்கள் செய்த குற்றம் அபாரமானதே. ஆயினும் இத்தகைய சந்தர்ப்பத்தில் சாதாரண நீதியைத்தவறி நடப்பது குற்றமாகாது. அவர்கள் இவ்வளவு கஷ்டமெடுத்துக்கொண்டு செய்த ஏற்பாடு அடியோடு பலிக்காமற்போய் அவர்கள் அடைந்த அவமானமே அவர்களுக்குப்போதுமான தண்டனை என்பதே எனது அபிப்பிராயம்'' என்றார். மற்ற பேரும் அதையே ஆமோதித்தார்கள். இத்தீர்மானத்தைக்கேட்ட வீரரத்னம் பிரபு அவர்களுடைய உதார குணத்தை மிகவும் புகழ்ந்து, ''நான் அவ்வாறே அவர்களை மன்னிப்பதாயினும் இப்போது நடக்கும் இதே நாழிகையில் அவர்கள் மலை நாட்டிற்குச்செல்ல ஆயத்தமாக விருக்

கும் கப்பலிலேறிச்சென்று அந்நாட்டிலிருக்கும் நமது அரண்மனையில் இருக்கவேண்டும்'' என்றார்.

அம்மாதரை யவ்வாறே கப்பலிலேற்றி யுடனே யனுப்பி விடும் பொறுப்பு கேசவனுக் களிக்கப்பட்டது.

அதன்பிறகு அவரவர்கள் தங்கள் தங்களுக்கு ஆயத்தம் செய்யப்பட்ட அறைகளுக்குச் சயனிக்கச் சென்றார்கள். ஆனால் ஜனரல் உக்கிரசேனரும் உலகநாயகனும் தாங்கள் நித்திரைக்குச்செல்லுமுன் கர்னல் இரகுநாதரை அபாண்டமான குற்றச்சாட்டினின்றும் காப்பாற்றவேண்டிய விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள்.

ஏற்பாட்டின்படி சகோதரிகள் மூவரும் அந்த இரவே கப்பலிலேற்றப்பட்டு அத்தீவை விட்டுச்சென்றார்கள். மறுநாள் காலை கோட்டையின் மேல் நாட்டப்பட்ட கறுப்புக்கொடியால் மேகநாதம் பிரபு மரணமடைந்தார் என்று நகரத்தில் சங்கதி பரவிவிட்டது. அதோடு இரவே வீரரத்னம் பிரபு தீவிற்கு வந்து சேர்ந்து தந்தைக்குப்பதில் அதிகாரத்தை யேற்றுக்கொண்டார் என்றும் பிரஸ்தாபமுண்டாயிற்று. அதோடு இரவே சகோதரிகள் மூவரும் தீவைவிட்டுச் சென்றுவிட்டார்க ளென்ற வதந்தியும் எங்கும் பரவிவிட்டது. அன்றே ஜனப்பிரதிநிதி சபை கூடி வீரரத்னம் பிரபுவே இப்போது அத்தீவின் அரசன் என்று அங்கீகரிக்கப்பட்டதாய் விளம்பரப்படுத்தி விட்டார்கள். வீரரத்னம் பிரபு அதிகாரத்தை யேற்றுக்கொண்டவுடனே அன்னியநாட்டிலுள்ள கள்ளர்கள் கொலையாளிகள் முதலிய துஷ்டர்கள் அத்தீவில் வந்து சேர்ந்து அக்கிரமச் செயல்களைச் செய்யா வண்ணம் தடுப்பதற்காக ஒரு சட்டம் பிறப்பிக்க வேண்டுமென்று ஜனப்பிரதிநிதி சபையில் பிரேரேபித்தார்.

சகோதரிகளின் அக்கிரமச்செயல்களும், ஜனரல் உக்

கிரசேனர் முதலியவர்கள் சிறையிடப்பட்டிருந்ததும், ஆகிய இவையாவும் ஒருவருமறியாமல் அடக்கப்பட்டன. இதனால் ஜனரல் முதலியவர்கள் அதே யிரவு வீரரத்னம் பிரபுவோடு கூட அன்னிய நாட்டிலிருந்து வந்ததாகப் பிரஸ்தாபம் செய்யப்பட்டது. காப்டன் உருத்திரப்பனுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமென்று பிரபு கூறிய போது ஜனரல் உக்கிரசேனர் "பிரபுவே! நடந்த குற்றங்களுக்கு மூலகாரணமானவர்கள் மன்னிக்கப்பட்ட வரையில் அவர்களின் கையாயுதமாக விருந்த இவனைக்கொலை செய்தால், நடந்த விஷயங்கள் யாவுமறிந்தவர்கள் அவன் மேல் ஏதோ வஞ்சந்தீர்த்துக்கொண்டதாகக்கருதுவார்களே யன்றி, நியாயப்படி யவன் தண்டிக்கப்பட்டதாகக் கருதமாட்டார்கள். இந்த விஷயங்களில் ஒன்றையும் அறியாத நகரஜனங்களோ கோட்டையில் ஏதோ பெரிய விசேஷம் நடந்திருக்கிறதென்றும், எல்லா விஷயங்களும் இரகசியமாக அடக்கப்பட்டிருக்கின்றனவென்றும் கருதுவார்கள். இதனால் கலகம் நேரிடும்" என்றார்.

வீரரத்னம் பிரபு ஜனரலின் அபிப்பிராயத்தை யேற்றுக்கொண்டு காப்டனை மன்னித்துவிட்டு "அவன் உடனே தீவைவிட்டுப் போய்விடவேண்டுமென்றும், மூன்று நாட்களுக்குப்பின் தீவில் காணப்பட்டால் மரணதண்டனை யளிக்கப்படுமென்றும் தீர்ப்பளித்தார். தன் தந்தையின் தகனக்கிரியை நிறைவேறும் வரையில் ஜனரல் முதலிய அனைவரும் தமது மாளிகையிலேயே விருந்தாளிகளாக இருக்கவேண்டுமென்று மிக்க அன்போடு வேண்டிக்கொண்டார். தமது தங்கைகளால் தம்மாளிகையிலேயே அத்தகைய துன்பங்களை யனுபவித்துத் தேகபலமும் மனோநிம்மதியும் குன்றியிருக்கும் இவர்கள் கொஞ்சநாட்களாவது தம்மிடம் அன்பார்ந்த விருந்துண்டு தேகத்த[illegible]

600 008
186483

பாறிய பின்பு செல்லவேண்டும் என்பது வீரரத்ன அரச னுடைய விருப்பம். அவ்வாறு மிக்க விருப்பத்தோடு வேண்டிக்கொள்ளும்போது அதை மறுப்பது தகுதியல்ல வென்பது ஜனரலின் அபிப்பிராயம். ஆகையால் ஜனரல் உலகநாயகனை நோக்கி "நண்பனே! உன் உயிர் இலவண புரியிலும் தேகம் இங்கு மிருக்கிறதென்பதை நானறி வேன். உன் மாமனர் எப்படியும் காப்பாற்றப்படுவார். நாம் இப்பிரபுவின் விருப்பத்திற்குச் சம்மதிக்காவிடின் அவருக்கு மிக்க மனவியாகூலமாகும். இறந்த பிரபுவின் சமாதிக்கிரியைநடக்க இன்னும் நான்கு நாட்களிருப்பதால் உன் மனைவிக்குத்தேறுதலான ஒரு கடிதம் எழுது. அதை யொரு ஆள் வசம் இன்றைக்கே யனுப்புவோம்'' என்றார்.

உலகநாயகன் அவ்வாறே நடந்த விஷயங்களைச் சுருக்கமாகக் கூறி ஐந்தாறு நாட்களில் தாங்கள் இலவண புரி வந்து சேருவதாகவும், அவளுடைய தந்தை அவசியம் மரணபத்தினின்றும் காப்பாற்றப்படுவாரென்றும் மிக்க அன்புடைய நிறைந்த தேறுதல்கள்கூறி ஒரு கடிதம் வரைந் தான். அன்றே அக்கடிதம் ஒரு தகுதியான ஆள்வசம் இலவணபுரிக் கனுப்பப்பட்டது.

ஜனரல் உக்கிரசேனரும், உலகநாயகன், மேஜர் இலக்ஷ்மணன், அவனுடைய சகோதரன், பிரேமநாதன் முதலிய வர்களும் மிக்க அன்போடு வீரரத்னம் அரசனல் உபசரிக் கப்பட்டு வந்தார்கள். கோட்டைக்காவலுக்கு நல்லயோக் கியராகிய ஆட்கள் புதிதாக அமர்த்தப்பட்டார்கள். பழைய ஆட்களில் நம்பிக்கையானவர்களும் வேலைக்கு வைத்துக்கொள்ளப் பட்டார்கள். இவர்களனைவர்க்கும் கேசவன் காப்டனுக உயர்த்தப்பட்டான். ஜனரல் உக் கிரசேனர் அவனுக்கு ஒரு அழகிய வீடு வாங்கியளித்தார். அவனுடைய வயது முதிர்ந்த தாய் தந்தையர் தங்கள்

பழைய குடிசை வீட்டை விட்டுவிட்டுப் புது வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களின் ஏழ்மை நிலைமை நீங்கி வேலைக்காரர் தங்களுக்குப் பணிசெய்யச் சுகமாக வாழத் தொடங்கினார்கள்.

ஐந்தாவது நாள் மேகநாதம் பிரபுவின் சவம் தக்க ஆடம்பரங்களோடு அக்குடும்பத்தாரது மசான பூமிக்குக் கொண்டுபோய் அடக்கம் செய்யப்பட்டது. அன்றே வைத்தியரின் சவமும் அடக்கம் செய்யப்பட்டது. அதற்கும் வேண்டிய மதச்சடங்குகளைக் குறைவறச் செய்யும் படி அரசர் கட்டளை யிட்டிருந்தார். ஜெனரல் உக்கிர சேனர் முதலியவர்கள் மறுநாள் புறப்படவிருக்கும் கப்ப லில் இலவணபுரிக்குச் செல்ல ஆயத்தமாகவிருக்கிறார்கள். அந்தோ! மனிதன் எண்ணம் அவன் பிரியப்படி நிறை வேறுவது நிச்சயமோ! ஊட்டிவைக்கவும் உறங்கவைக்க வும், ஒன்றேடொன்றைக் கூட்டிவைக்கவும், இருவினைப் பாசக்கயிற்றின் வழி யவரவர்களை யாட்டிவைக்கவும் சர்வ சுதந்திரமும் சர்வ வல்லமையுமுள்ள ஒருவனது கருத்தை யுணரவல்லாரார்? சவங்கள் அடக்கம் செய்யப்பட்டதினம் மாலைப்போஜனம் முடிந்ததும் யாவரும் மறுநாள் பிரயா ணத்தைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் ஒரு பயங்கர சமாசாரம் கோட்டைக்குக் கொண்டு வரப்பட் டது.

வீரரத்னம் பிரபுவின் சகோதரிகள் கப்பலி லேற்றி மலைநாட்டிற்கு அனுப்பப்பட்டார்கள் என்று கூறினேமல் லவா. அவர்கள் மலைநாட்டிற்குச் செல்லவேயில்லை. அவர்களிடம் மிக்க விலைமதிப்புள்ள நவரத்னங்களும் ஆப ரணங்களுமிருந்தன. அன்றிரவு கப்பலேறியவர்கள் அக் கப்பலின் கப்பித்தானுக்கும் மற்ற ஆட்களுக்கும் பணம் கொடுத்து அவர்களை வசப்படுத்திக் கொண்டபடியால்

இரண்டாவது நாள் மாலை அத்தீவின் தெற்குக் கரையில் கப்பலினின்றும் இறக்கப்பட்டார்கள்.

அங்கு அவர்கள் பொய்வதந்திகளைக் கூறி முதலில் சிலருக்குத் தங்கள்மேல் இரக்கமுண்டாகச் செய்து கொண்டு பிறகு தாராளமான ஈகையால் பலரைத் தங்கள் பட்சத்தில் சேரும்படி செய்து தங்கள் தமையன்மேல் யுத்தத்திற்குவர முயற்சிசெய்துகொண் டிருக்கிறார்களென்று முதலில் சமாசாரம் வந்தது. பிறகு நாழிகைதோறும் விசேஷ சமாசாரங்கள் வந்து கொண்டே யிருந்தன. அவர்கள் தங்கள் தமையன் தங்கள் தந்தையைக்கொன்று விட்டதாகவும், அதையறிந்த வைத்தியனைக் கொன்றுவிட்டதாகவும் தங்கள் தமையனுடைய அயோக்கியதையை யுணர்ந்திருந்தே தங்கள் தந்தை தமக்குப் பின் தீவின் அதிகாரம் தமது புத்திரிகளுக்கே என்று மரணசாசனம் எழுதி வைத்திருப்பதால், தமையன் தங்களையும் கொன்று விட உத்தேசித்தானென்றும் அதனால் தாங்கள் ஓடிவந்து விட்டதாகவும் விளம்பரங்கள் அச்சியற்றி எங்கும் பரவச் செய்தார்கள். இவற்றோடு தன் தமையன் தீவின் புராதன ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் அடியோடு தொலைத்துவிடப் போகிறானென்றும், அன்னிய நாட்டி லிருந்து அங்நாடுகளின் கொடுங்கோன்மைக் கஞ்சி இங்கு வந்து நிம்மதியாய் வசித்துக்கொண் டிருப்பவர்களுக்கெல்லாம் மிக்க கடினமான நிபந்தனைகளும் அவர்கள் நடக்கைகளைப்பற்றிக் கடின சட்டங்களும் ஏற்படுத்தப் போகிறானென்றும் விளம்பரங்களில் கூறியிருந்தார்கள். இவற்றால் இதுகாறும் நிம்மதியாய்த் தங்கள் மனம் போனபடி கொலை, களவு, கப்பற் கொள்ளை முதலிய காரியங்களால் ஜீவனம் செய்துகொண் டிருந்த நாடோடிகள் போக்கிரி

கள் முதலியவர்க ளெல்லாம் அச்சகோதரிகளின் பட்சத்தில் சேர்ந்து கொள்ளப் பிரியமுடையவர்களானர்கள்.

இச்சங்கதிகள் யாவும் ஒன்றின்பின் ஒன்ருகக் கோட்டைக்கு வந்து சேர்ந்துகொண்டே யிருந்தன. மறுநாட்காலை தெற்குக் கரையிலுள்ள இரண்டு நகரங்கள் சகோதரிகளுக்குத் துணை நிற்கத் தீர்மானித்துவிட்டன வென்று சமாசாரம் எட்டியது.

வீரரத்னம் அரசன் தைரியமுடைய வீரனே என்பதில் ஐயமில்லை. ஆனல் அவன் இதுவரையில் அன்னிய நாடுகளில் சிற்றின்பக் கேளிக்கைகளிலேயே காலத்தைக் கழித்துவந்ததால், இத்தகைய ஆபத்திற்குத் தக்க சமயோசித யோசனையிலும், தந்திரசாமர்த்தியங்களிலும், போர்செய்யும்போது அவசியமாகவேண்டிய சாந்தம், கலவரமின்மை, ஆழ்ந்த முன் யோசனை, துணிகரம் முதலிய குணங்களிலும் பழக்கமில்லாதவனுக விருந்தான்.

ஆகையால் அவன் இத்தகைய சமயத்தில் சமயோசித ஆலோசனை கூறி என்னை யிந்த ஆபத்தினின்றும் தப்பும்படிச் செய்யத் தாங்களும் தங்கள் நண்பர்களும் இன்னும் கொஞ்சக்காலம் இங்கேயே தாமதித்திருக்க வேண்டுகிறேன் என்று ஜனரல் உக்கிரசேனரைப்பிரார்த்தித்தான்.

நியாயமான விஷயத்தில் ஒருவனுக்கு உதவி செய்து, அவனுக்கு அக்கிரமமாகக்கெடுதி செய்ய முயல்வோரைத் தண்டித்து நீதியை நிலை நிறுத்தச் சமயம் வாய்த்தால் ஜனரல் உக்கிரசேனர் அத்தகைய சமயத்தை வீணுக்கிவிடுங் குணமுடையவரல்ல. ஆகையால் இத்தகைய சந்தர்ப்பத்தில் வீரரத்னம் பிரபுவுக்கு உதவி செய்யாமற் போவது நியாயமென்று அவருக்குப் புலப்படவில்லை. அவருடைய வீரத்தன்மையும் சாமார்த்தியங்களும் உலகறிந்த விஷயங்க

ளாதலால் வீரரத்னம் அரசன் ஜனரல் உக்கிரசேனர் மேலேயே பூரண நம்பிக்கை வைத்து விட்டான். ஜனர லின் அபிப்பிராயத்தை யுணர்ந்த உலகநாயகன், மேஜர் இலக்ஷ்மணன் இவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். இராமநாதன் பாரிஸ்டர் உத்தியோகம் செய்பவனுயினும் இச்சமயம் வாளேந்திப் போர்புரியச் சம்மதப்பட்டான்.

இதற்குள் பயங்கரமான சங்கதிகள் ஒன்றின்பின் னென்ருகக் கோட்டைக்கு வந்துகொண்டே யிருக்கின் றன. காப்டன் உருத்திரப்பன் நகரத்தை விட்டுப் புறப்பட் டவன் அதற்குள் சகோதரிகளின் சங்கதிகளைக் கேட்ட தும் நேராய் அவர்களிடம் போய்ச்சேர்ந்து கொண்டான் என்று சங்கதி வந்தது. வீரரத்னம் அரசன் மிக்க மன வருத்தமும் பீதியுமடைந்தான்.

சகோதரிகள், வீரரத்னம் பிரபு அத்தீவின் புராதன வழக்கங்களை யெல்லாம் ஒழித்து விட நினைக்கிருன் என்று கூறியது, அப்பிரபு சாதாரண காலங்களில் ஒவ்வோரம யம் கூறியவார்த்தைகளைக்கொண்டே யாகும். இப்போது அப்பிரபு அன்னிய நாட்டிலிருந்து வரும் துஷ்டர்களை யிங்கு வரவிடாதபடி ஏற்பாடு செய்யவேண்டு மென்று ஜனப் பிரதிநிதி சபையாரிடம் பிரஸ்தாபித்த சங்கதி வெளி யில் தெரிந்தபோது, ஜனங்கள் சகோதரிகள் கூறிய மற்ற யாவுமே உண்மை யென்று கருதிக்கொண்டார்கள்.

## 55-வது அத்தியாயம்.

### சகோதரிகள் தந்திரமாய்ச்சேனைகளைச்சேர்த்தல்—ஜனரல் உக்கிரசேனரின் உதாரத்வச்செய்கை—மும்முரமான யுத்தம்.

---

சாதாரணமாய் பாமர ஜனங்கள் பொய்யையே சட்டென்று நம்புவது வழக்கம். சகோதரிகள் கூறிய மேற்கண்ட பொய்வதந்திகளோடு, வீரரத்னம் பிரபு தன் சுதந்திரத்தை இலவணபுரி அரசனிடம் அடகு வைக்கப்போவதாகவும், அந்த அரசனுடைய சேனைகள் இத்தீவில் வந்து காவல் செய்வார்களென்றும் விளம்பரப் படுத்தினார்கள். இதனால் பயிரிடும் சாதாரண ஜனங்கள் கூட பீதியடைந்து தங்கள் தங்கள் கலப்பை மண்வெட்டி முதலிய விவசாயக்கருவிகளை யெறிந்து விட்டுக் கத்தியும் துப்பாக்கியும் எடுத்துக்கொண்டு சகோதரிகளின் கொடிக் கீழ் வந்து குழுமினார்கள்.

அத்துஷ்ட மாதர்கள் தங்கள் நகைகளை விற்ற ஏராள மான பணத்தால் யுத்தமுஸ்தீபுகள், சேனைக்கு உணவுப் பொருள்கள், யாவும் ஆயத்தம் செய்யத்தொடங்கினார்கள். அவர்கள் கட்சியில் சேர்ந்த இரண்டு நகரங்களின் பல மான கோட்டைகளிலிருந்த ஏராளமான கத்தி யீட்டி குண்டு மருந்து பீரங்கி முதலிய யாவும் இவர்களுக்கு உதவி யாகக் கிடைத்தன.

இதற்கிடையில் வீரரத்னம் அரசரின் கட்சி சும்மா விருக்கவில்லை. இப்பிரபு எப்போது ஜனரல் உக்கிர சேனரையே தனக்குப்பாதுகாப்பு ஸ்தலமாக நம்பி அவ ரிடம் அடைக்கலம் புகுந்து விட்டாரோ, அப்போதே

ஜனரல் இதைத் தமது சொந்தக்காரியமாக ஏற்றுக்கொண்டார். அம்மாதர்களின் விளம்பரங்களைக் கண்டித்துப் பிரதி விளம்பரங்களை வெளியிட்டார். தாமே நேரில் நகரத்திலும் மற்ற விடங்களிலும் சென்று பிரசங்கவாயிலாக அச்சகோதரிகளின் வார்த்தைகளைப் பொய்ப்படுத்தி ஆட்களைச் சேர்த்தார். ஏககாலத்தில் அங்கும் இங்கும் எங்குமாக விருந்து தேக ஆயாசத்தை யொரு பொருட்படுத்தாமல் உழைத்தார். என்னபாடுபட்டும் அக்கிரமஸ்தர்களும், அயோக்கியர்களும், அறிவீனர்களுமாகிய ஜனங்களுக்குச் சகோதரிகளின் வார்த்தைகளிலுள்ள நம்பிக்கை நீங்கவில்லை. அறிவுடைய சிலர் மட்டும் தாங்கள் கேள்விப்பட்ட இவருடைய சுத்த வீரத்தன்மையையும், சத்திய நெறியையும் கருதி இவர் கட்சியில் சேர்ந்தார்கள்.

நகரத்தில் இருந்த ஜனங்களில் யாரார் இதுகாறும் தங்கள் பிரியப்படி அக்கிரமச் செய்கைகளால் ஜீவித்து வந்தார்களோ, அத்தகையோ ரனைவரும் இனித்தங்களுக்கெல்லாம் இடையூறு நேரிடுமென்றஞ்சி நகரத்தை விட்டோடிச் சகோதரிகளின் சைனியத்தில் சேர்ந்து கொண்டார்கள். இவ்வாறு அத்துஷ்டமாதர்களின் சேனை பெருத்து விட்டது. ஜனரல் உக்கிரசேனர் தாம் சேர்க்கும் தரைப்படையோடு துறைமுகநகரங்களில் கிடைக்கக்கூடிய கப்பல்களை யெல்லாம் சேர்த்து ஒரு கடற்படையை ஸ்தாபித்தார். சுமார் ஒரு மாதம் வரையில் இந்த யுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன.

இதற்கிடையில் ஜனரல் உக்கிரசேனரின் ஆலோசனைப்படி உலகநாயகன் தன் மனைவிக்கு இரண்டு மூன்று கடிதங்கள் வரைந்தான். அவை யொவ்வொன்றிலும் அவளுக்குத்தேறுதல் கூறி எழுதி யிருந்தான். அமராவதியிடமிருந்து பதில் கடிதங்களும் வந்தன. இவ்வாறிருக்கை

யில் திடீலென்று சகோதரிகள் தங்கள் சேனையோடு தலை நகரை நோக்கி வருகிறார்களென்றும், நாளை மாலை நகர வோரம் வந்து சேர்வார்களென்றும் சங்கதி யெட்டியது. இதைக்கேட்டதே வீரரத்னம் அரசன் ஜனரல் உக்கிர சேனரை நோக்கி "நாம் உடனே கோட்டையிலுள்ள சேனையை ஆயத்தமாக இருக்கும்படி எச்சரிக்கை செய்து கோட்டைக்கதவை யுடைத்து முற்றுகைக்கு ஆயத்தமாக இருப்போம்" என்றார்.

ஜனரல் "பிரபுவே! இவ் விஷயத்தில் என்னையே யாவற்றிற்கும் தலைவனாகிய சேனாதிபதியாய்த் தாம் ஒப்புக் கொண்டவரையில் யாவற்றையும் என் பிரியப்படி விட்டு விடும். இச்சமயம் எதிரிகள் நமது ஸ்தலத்தை முற்றுகை போடும்படிக்கும் நாம் கூண்டில் அடைக்கப்பட்ட மிருகங்கள்போல் இருக்கும் படிக்கும் இடங்கொடுப்பது மிக்க ஆபத்திற்கு இடமாகும். நாம் உடனே நமது சேனையோடு வெளிச்சென்று நகர எல்லைக்கு வெளிப்புறமே எதிரிகளைத் தாக்கிப் போர் தொடுப்பதே தகுதியாகும்" என்று கூறி, அரசன் விடைக்கு எதிர்பாராமல் தாம் கூறியபடி நடக்கவேண்டியதற்கு அவசியமான கட்டளைகளைப்பிறப்தார்.

அச்சமயம் இருபுறங்களின் நிலைமையும் எவ்வாறிருந்ததெனப் பார்ப்போம். சகோதரிகளின் பக்கம் சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆட்கள் சேர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு வேண்டிய ஆயுதங்கள் முதலிய யுத்த முஸ்தீபுகள் யாவும் ஏராளமாக விருந்தன. அந்த ஆட்களோ எதற்கும் அஞ்சாத துணிகரமுடைய போக்கிரிகள். அவர்களில் யுத்தப்பயிற்சியும் தைரியமுமுடைய ஆட்களும் பலர் இருந்தார்கள். அவர்களிடம் பீரங்கிகளும் மருந்து குண்டுகளும் ஏராளமாக விருந்தன.

வீரரத்னம் அரசரின் பட்சத்திலோ ஆயிரம் வீரர்களுக்குக்குறைவாகவே யிருந்தார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் ஜனரல் உக்கிரசேனரால் பயிற்சி செய்யப்பட்டு, நீதியின் பட்சம் கடவுள் எப்படியும் உதவி செய்வாரென்றும், நாம் கடவுளை நம்பி உயிரைத்திரணமாக மதித்து முன்வைத்தகாலைப் பின்வைக்காமல் சத்தியமான யுத்தம் புரியவேண்டு மென்றும் போதிக்கப்பட்டார்கள். ஆயுதங்கள் முதலியவை யிவர்களுக்கும் போதுமானவரை கிடைத்தன. கடைசியில் நாளைக்காலை இச்சிறு சேனை நகரத்தை விட்டுச்செல்ல ஆயத்தமாய் விட்டது.

அன்றிரவு யாவரும் போசனம் செய்தான பின் ஜனரல் உக்கிரசேனர் உலகநாயகனைத் தன் அறைக்கு அழைத்துச்சென்று பின் வருமாறு கூறினர்.

"நண்பனே! நான் உன் மேல் எத்தகைய வாஞ்சை வைத்திருக்கிறே னென்பதை நீ நன்கறிவாய். நான் உன் மேல் சகோதரவாஞ்சை வைத்திருக்கிறேன். இன்னும் என் சொந்தச் சகோதரனுகவே உன்னை மதிக்கிறேன். உன் மனைவி என் சகோதரி யாகும். எனக்கு இன்னும் கொஞ்சம் அதிகமாக விருந்தால் எனக்குன்மேலிருப்பது புத்திர வாஞ்சை யென்றே கூறுவேன். பெருந்தன்மையும் சத்திய நெறியும் சுத்த வீரத்தன்மையுமுடைய உனது மாமனுராகிய கர்னல் இரகுநாதர் மீது எனக்குப்பூரண அன்புண்டு. அவர் தங்கை விஷயத்திலும் நான் மிக்க இரக்கம் பொருந்திய விசுவாச முடையேன்." என்றதே, உலகநாயகன் தங்களுக்கு என் விஷயத்திலும் என்னைச்சேர்ந்தவர்கள் விஷயத்திலுமுள்ள அன்பைப் பன்முறை மிக்க உதாரத்தோடு வெளியிட்டிருக்கிறீர்கள். அதற்கு நாங்கள் எங்கள் உயிருள்ளவரை தங்களிடம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்!" என்றான்.

ஜனரல் "இப்போது இத்தீவில் நான் தாமதித்திருப்ப தோடு உன்னையும் தாமதித்திருக்கும்படி கூறியதன் காரணம் உனக்குத்தெரிந்தே யிருக்கும். நாம் இருவரும் நமது கட்சியில் நீதி யிருக்கிறவரையில், எங்கே ஆபத்துகள் நெருங்கி யிருக்கிறதோ, எங்கே கௌரவம் பொருந்திய யுத்தத்தில் வெற்றிமாலை கிடைக்குமோ அங்கே இருக்க வேண்டியது நமது கடமை ஆயினும் உனது மாமனாரை எவ்வாற்றானும் காப்பாற்றுவேன் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கில்லாவிட்டால், கௌரவம் பொருந்தியதும் வீரத்தன்மை யுடையதுமான இத்தகைய கடமையைக் கூட விட்டு விட்டு உன் மாமனாரிருக்கு மிடத்திற்குச்செல்வேன். ஆனால் மறுபடி கூறுகிறேன். உன் மாமனார் கட்டாயம் மீட்கப்படுவார்" என்று கூறிக்கொண்டே மேஜையின் ஒரு அறையைத் திறந்து அதிலிருந்து ஒரு அரக்கு முத்திரை யிட்ட கடித உறையை யெடுத்துக் கரத்தில் பற்றிக்கொண்டு உலகநாயகனை நோக்கி, "நண்பனே! நாம் இப்போது முன் வைத்த காலைப் பின் வைக்கலாகாத யுத்தத்தில் பிரவேசிக்கப் போகிறோம். நாமிருவரும் யுத்தகளத்தில் மடியக்கூடும். நமது நண்பர்களாகிய மேஜர் இலக்ஷ்மணனும் பிரேமநாதனும் கூட நம்மோடு யுத்தத்தில் பிரவேசிக்கப் போகிறவர்களே. அவர்களும் வீரசொர்க்கமடையலாகும். சுருக்கிச்சொல்லுமிடத்து நாம் நால்வரும் யுத்தத்தில் விண்ணுலகடையலாகும். ஆகையால் உன் மாமனாரை மீட்பதற்குத்தக்க ஏற்பாடு செய்து விட்டால் நாம் இறப்பதாயினும், அவர் எப்படியும் காப்பாற்றப்படுவார் என்ற மனோ நிம்மதியுடையவர்களாக விருக்கலாம். இதோ இக்கடிதத்தில் அவரைக் காப்பாற்றத்தக்க மார்க்கம் இருக்கிறது. இதன் மேல் விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் ஆசாமியிடம் இது

அளிக்கப்படவேண்டும். இந்த உபகாரத்தைச் செய்வதாக நமது மேஜர் இலக்ஷ்மணனுடைய சகோதரராகிய இராமநாதர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அதோ துறைமுகத்தில் நிற்கிறதே, அக்கப்பல் இன்னும் ஒரு மணிநேரத்தில் இலவணபுரிக்குப் புறப்படப் போகிறது. இராமநாதர் அதில் செல்ல ஆயத்தமாகவிருக்கிறார்'' என்றார்.

உலகநாயகன் "ஆ! அவர்கூட நம்மோடு யுத்தத்திற்கு வரப்போகிறாரென்று நான் நம்பியிருந்தேன்'' என்றான். ஜனரல் உக்கிரசேனர் "உண்மையாகவே வரத்தானிருந்தார். நான்றான் அவரைத் தடுத்து இவ்வுதவியைச் செய்யும்படி கோரிக்கொண்டேன். அதனால் அவர் அவாவோடு எற்றுக்கொள்ளவிருந்த கௌரவமான தொழிலை விட்டு விட்டு ஒருவருடைய பிராணனைக் காப்பாற்றும் இவ்வுபகாரத்தைச் செய்ய உடன் பட்டார். இக்கடிதத்திலடங்கியுள்ள சமாசாரம் இன்னதென்று நான் அவருக்குக் கூறவில்லை. ஆனால் இது சரியாய்க்குறித்த ஆளிடம் சேர்க்கப்பட்டால் நிரபராதியாகிய உமது மாமனாரின் பிராணாபத்து நீங்கும் என்றுமட்டும் அறிவித்திருக்கிறேன்'' என்றார்.

அதே சமயம் அறையின் கதவு திறக்கப்பட்டதும் இராமநாதர் பிரயாணத்திற்கு ஆயத்தமாக யாத்திரையுடையணிந்து கையிற்பிடித்த பிரயாணப்பையோடு உள்ளே வந்தார். ஜனரல் உக்கிரசேனர் அவனை நோக்கிப் புன்னகையோடு "நீ ஆவல் கொண்டிருந்த கௌரவம் கிடைக்கும் தொழிலை விட்டு விட்டு என் கோரிக்கையால் எவ்வளவு உதாரத்தோடு இலவணபுரிக்குச் செல்லச் சம்மதித்தாய் என்பதைப்பற்றித்தான் நமது உலகநாயகனிடம் கூறிக்கொண்டிருக்கிறேன்'' என்றார்.

இராமநாதன் "நண்பரே! வேறு யார் எத்தகைய

தொழிலுக்காக இதை விட்டுச் செல்லும்படி கூறினும் நான் சம்மதிக்கமாட்டேன். தங்களுடைய அரிய குணங் களையும் சுத்தவீரத்தன்மையையும் அறிந்த எவரும் தங் கள் கட்டளை யெதுவாயினும் சரி, அதற்கு மறுத்துக்கூறத் துணியமாட்டார்கள். அவ்வாறே நானும் தங்கள் பிரியம் எது வாயினும் அதையே சட்டமாக ஏற்றுக்கொள்வேன். அதுவே எனது கடமை. உண்மையில் நான் நீதிச் சபை யில் தொழில் புரிபவனாயினும் இச்சமயம் வாளேந்திப் போர்புரிய மிக்க ஆவல் கொண்டே யிருந்தேன். பிரயா ணத்திற்கு ஆயத்தமாக வந்து விட்டேன். இனித்தங்கள் கட்டளையை யியம்ப வேண்டியதே தடை'' என்றான்.

உலகநாயகன் இராமநாதர் செய்யச் சம்மதித்த சகா யத்திற்காகத் தன் நன்றியையவனிடம் வெளியிட்டான். ஜனரல் உக்கிரசேனர் இராமநாதரை நோக்கி,

"நண்பரே! நீர் இலவணபுரி இராஜ்ஜியத்தின் துறை முகநகரில் இறங்கியதே ஆலசியமின்றி இலவணபுரிக்குச் செல்லவேண்டும். அங்கு சென்றதும் அரியநாதம் பிரபு வின் மனைவியாகிய ஜகதாம்பாள் சீமாட்டியை நேரில்கண்டு இக்கடிதத்தைக் கொடுத்து இதை ஒரு வாரம் வரையில் பத்திரமாகப் பிரிக்காமலே வைத்துக்கொண் டிருக்க வேண்டுமென்றும், அந்த ஒரு வாரத்திற்குள் நானாவது அங்குவந்து சேராமல் அல்லது என்னிடமிருந்து வேறு கடிதமாவது வாராமல் இருந்தால் இதை யந்தம்மாளே பிரித்துப்பார்த்து இதில் கூறியிருக்கிறபடி நடந்துகொள் ளவேண்டுமென்றும் நீ கூறவேண்டும்'' என்றார்.

இராமநாதன் "தங்கள் கட்டளைப்படிக்கே செய்கி றேன். வேறு ஏதேனும் கட்டளை யுண்டோ?'' என்றான்.

ஜனரல் உக்கிரசேனர் சற்று சிந்தித்து "ஆம். இருக் கிறது. இத்தகைய விஷயங்களில் என்னென்ன இடை

யூறுகள் தடைகள் நேரிடக்கூடுமோ அவைகளை முன்னு டியே சிந்தித்துத் தக்க எச்சரிக்கை யெடுத்துக் கொள்ள வேண்டும். நீ இக்கடிதத்தைக் கொடுக்க அச்சீமாட்டியிடம் செல்லும்போது, ஒரு சமயம் அச்சீமாட்டி ஊரில்லாமல் எங்கேனும் வெளியில் சென்றிருந்தால், அல்லது தேகசுக மின்றிப் படுத்தபடுக்கையாகவே யிருந்தால், அல்லது இறந்துபோயே யிருந்தால் அத்தகைய சந்தர்ப்பத்தில், இதை நீயே பத்திரமாய் வைத்துக்கொள். ஒருவாரம் வரையில் இதைப் பிரிக்கவேண்டாம். அதற்குள் முன் கூறியபடி நானும் வராமல் என்னிடமிருந்து சமாசாரமும் வராமலிருந்தால் இதைப் பிரித்துப்பார்த்து இதிற் கூறிய படி அச்சீமாட்டிக்குப் பதில் நீ நடந்து கொள்ளவேண் டும்'' என்றார்.

இராமநாதன் அவ்வாறே கட்டளைப்படி நடந்துகொள் வதாகக் கூறி விடைபெற்றுக் கொண்டு சென்றான். எதி ரிகள் நகரத்தினருகில் நெருங்கி விட்டதாகச் சங்கதிவரவே ஜனரல் உக்கிரசேனர் யாவரையும் ஆயுதபாணிகளாகப் புறப்படும்படி கட்டளையிட்டார். சுமார் அறுபது பேர் மட்டும் வீரரத்தனம் அரசனோடு கோட்டையின் பாது காப்பிற்காக அங்கு விடப்பட்டார்கள்.

இப்போது ஜனரல் வசத்தில் அறுநூறு காலாட்படை வீரர்களும் முந்நூறு குதிரைவீரர்களுமே இருக்கிறார்கள். இச்சேனை மூன்று பாகங்களாக வகுக்கப்பட்டது. வலது பக்கப் படைக்கு உலகநாயகனும், இடது பக்கப்படைக்கு மேஜர் இலட்சுமணனும் படைத்தலைவர்களாக நியமிக்கப் பட்டார்கள். மையச் சேனையை ஜனரலே நடத்தினர்.

சகோதரிகளிடம் நாலாயிரம் காலாட் படைவீரர்க ளும் ஆயிரம் குதிரைவீரரும் இருந்தார்கள். இவையன்றி ஆறுபீரங்கிகளும் இருந்தன. இவர்கள் சேனை நான்கு

பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வலது பக்கச் சேனை யுத்த அப்பியாசமுடைய ஒரு பலம் பொருந்திய வீரனால் நடத்தப்பட்டது. கற்பகம் ஆண் பிள்ளையைப் போல் கவசமணிந்து கையில் வாளேந்தி அப்படைத்தலைவன் பக்கத்தில் வந்தாள். இடது பக்கச்சேனையின் படைத்தலைவன் பக்கத்தில் சண்பகம் தன் தமக்கையைப்போல் கவசமணிந்து வாளேந்தி நின்றாள். மையச்சேனையின் தலைவன் பக்கல் துளசிபாய் நின்றாள். பின் பக்கம் சமயோசிதப்படி யுதவிசெய்ய மீதிச்சேனை யிருந்தது. இச்சேனைகளை நடத்தும் படைத்தலைவர்கள் மூவரும் யுத்தத்தில் பழகியவர்களே. இம்மொத்த சேனைக்கும் காப்டென் உருத்திரப்பன் சேனாதிபதியாக அமர்த்தப்பட்டான். அவனுக்கு ஜனரல் பட்டமளிக்கப்பட்டிருந்தது.

காலை ஆறுமணிக்கு யுத்தம் தொடங்கியது. ஜனரல் உக்கிரசேனர் தன் மையச் சேனையை நடத்தும்படி தன் உதவிப் படைத்தலைவனுக்குக் கட்டளையிட்டு விட்டு அவர் யுத்தகளம்முழுமையும் கண்களுக்குப் புலப்படும் படியான ஒரு மேட்டில் நின்றிருந்தார். அவர் பக்கங்களில் பிரேமநாதன், கேசவன் இவர்களும் இன்னும் இருவரும் குதிரைகள் மேல் இருந்தார்கள்.

சகோதரிகளும் அவர்கள் சேனைத்தலைவர்கள் முதலியோரும் ஜனரல் உக்கிரசேனர் யுத்த முனையில் நில்லாமல் தனித்து வேடிக்கை பார்ப்போரைப்போல் நிற்பதைக் கண்டதும் ஒகோ இவர் யுத்தத்தில் தலையிடமாட்டாரென்று சந்தோஷமடைந்தார்கள். இன்னொரு விஷயம் இவர்களுக்கு இந்த உத்தேசம் நிச்சயமென்று கருதக் காரணமாக விருந்தது. அதாவது யுத்தம் தொடங்கியது முதல் இவர்கள் பீரங்கிகளும் வேலைசெய்யத் தொடங்கின. வீரரத்னம் அரசன் சேனைக்கு பீரங்கிகளேயில்லை. இது

பெரிய மூடத்தனமான ஏற்பாடு. ஜனரல் உக்கிரசேனர் பிரசித்திபெற்ற சேனுவீரராயிருக்க அவர் இப்போது சேனைத்தலைவராக விருந்தால் இவ்வளவு அஜாக்கிரதை யான ஏற்பாடு செய்யவே மாட்டார். ஆகையால் அவர் சண்டையைப் பார்த்துவிட்டுச் செல்லவே தங்கியிருக்கி ருர் என்று நம்பினர்கள். ஜனரல் உக்கிரசேனரும் மார் பின்மேல் கரங்களைக் கட்டியபடி நின்று பார்த்துக்கொண் டிருந்தார். ஆனுல் அவர் அருகில் ஒருவன் நின்று அவர் முகத்தை யுற்றுப் பார்த்துக்கொண்டிருப்பானுயின் அவர் சேனைகளின் நடவடிக்கைகளை மிக்க உன்னிப்பாய்க் கவ னித்து வருகிருரென்றும், அவர் முகத்தில் பலவிதக் குறி கள் மாறிமாறித் தோன்றுகின்றன வென்றும், ஏதோ சம யத்தை யவர் எதிர் பார்த்துக்கொண் டிருக்கிருரென்றும் அறிந்துகொள்வான்.

எதிரிகளின் பீரங்கிகள் ஜனரலின் வலது பக்கச் சேனைக்குச் சேதமுண்டாக்கத் தொடங்கின. அதை யறிந்த உலகநாயகன் உடனே தன் படை. வீராவேசத் தோடு எதிரிகளின் இடப்பக்கச் சேனையின் மேல் விழுந்து தாக்கச்செய்தான். உடனே இவர்கள் இடதுபக்கவாட்டுச் சேனையும் எதிரிகளின் வலதுபக்கத்தைத் தாக்கத்தொடங் கியது. இவ்வாறு இருபக்கச் சேனைகளும் கலந்து யுத்தம் செய்யவே எதிரிகளின் பீரங்கிப்படை பேசாமலிருக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் இப்போது சுட்டால் தங் கள் ஆட்களும் மடிவார்கள். ஜனரல் உக்கிரசேனர் தமது சேனையை யணிவகுத்து நிறுத்த இடத்தைத்தெரிந்தெடுத்த சாமர்த்தியத்தால் எதிரிகளின் பீரங்கிகள் ஒரே விடத்தை மட்டும் நோக்கியே சுடக்கூடியவைகளாய் விட்டன. பிரிய மான விடத்தை நோக்கிச் சுடமுடியாமற் போய்விட்டது.

ஜனரலின் சேனை யாட்கள் எண்ணிக்கையில் குறை

வாயினும் மிக்க வீரத்தோடு யுத்தம் செய்யத்தொடங்கின. மூன்று மணி நேரத்திற்குள் எதிரியின் சேனையில் பிணக் குவியலும் காயம்பட்டு விழுவோர் தொகையும் அதிகமாய் விட்டன. வலது பக்கவாட்டுச் சேனை தத்தளிக்கத் தொடங்கியது. அச்சமயம் ஜனரலின் வலதுபக்கச் சேனை எதிரிகளின் இடது பக்கச்சேனைக்குள் முளையடித்தது போல் நுழைந்து விட்டது.

உலகநாயகன் உருத்திரமூர்த்திபோல் இருபக்கமும் பிணக் குவியலாக்கிக் கொண்டே தன்னைத் தடுப்பவர் யாருமின்றிச் சென்றுகொண் டிருந்தான். ஒரு மணி நேரத்திற்குள் எதிரியின் இடதுபக்கவாட்டுச் சேனை இரண்டாகப் பிளவுபட்டுவிட்டது. அச்சமயம் எதிரிகளின் வலதுபக்கச்சேனை பின்னிடையத் தொடங்கியது. கற்பகவல்லி தன்னாலானவரை ஆட்களைத் தைரியப்படுத்தி உற்சாக மூட்டி நிற்கச் செய்தும் முடியவில்லை. ஜனரல் உக்கிரசேனர் இன்னும் வேடிக்கை பார்ப்பவர்போலவே யிருக்கிறார்.

## 56-வது அத்தியாயம்.

யுத்த நிலைமையில் அதிசயமாறுதல்—ஜனரலின் அற்புதசாமார்த்தியம்—முடிவானஜேயம்—சந்தோஷ விளம்பரம்.

மணி பத்தரையாயிற்று. எதிரியின் சேனையில்சேதம் அதிகமாகவே மிச்ச மிருப்போர் மனத்தளர்ச்சி யடையத்தொடங்கினர்கள். ஜனரல் உக்கிரசேனர் யாவும் உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண்டே யிருந்தார். திடீ

லென்று அவர் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. அசையாது நிற்கும் ஒரு கற்கம்பம் திடீலென்று இராக்ஷசனுக உருமாறியது போல் அவரிடம் ஆச்சரியமான சுறுசுறுப்புண்டாயிற்று.

உடனே தன் அருகிலிருந்த மூவரிடம் படபடவென்று ஏதோ கூறினர். இது காறும் அசையாது சிலைகள் போல் இருந்த அவர்கள் தட்சணம் குதிரைகளைத்தட்டி விட்டு வாயு வேகமாய் பறந்தார்கள். பிரேமநாதன் உலக நாயகனிடமும், கேசவன் மேஜர் இலக்ஷ்மணனிடமும் சென்றுர்கள். மூன்றுவதாள் தூரத்தில் இருக்கும் ஒரு தோட்டத்தில் நுழைந்து மறைந்து விட்டான்.

பத்து நிமிடத்திற்குள் ஒரு ஆச்சரியமான மாறுதல் யுத்தகளத்தில் நேர்ந்தது. உலகநாயகனும் மேஜர் இலக்ஷ்மணனும் ஜெயமடையும் நிலைமையிலிருப்போர் சட்டென்று தங்கள் படையைப் பயந்து போனவர்கள் போல் பின்னிடையச் செய்தார்கள். மறுநிமிடம் எங்கோ மறைவான ஸ்தலத்திலிருந்து பூமி யதிரும்படியான பீரங்கி வெடிகள் கிளம்பியதும் எதிரிகளின் சேனையில் பயங்கரமான கொலை நேரத்தொடங்கியது. பீரங்கிக் குண்டுகள் எங்கிருந்து வருகின்றன வென்று தெரியாததால் அவர்கள் எத்திக்கே செல்வதென்று அறியாமல் திகைத்து அதிக சேதமடைந்து கலைந்தோடத் தொடங்கினர்கள்.

அச்சமயம் மறைவிலிருந்து வரும் பீரங்கிகள் எதிரிகளின் பின்னுலிருக்கும் காப்புச் சேனையைத் தாக்கத் தொடங்கின. யுத்த ஆரம்பத்திற்கு முன்பே தகுதியானதும் எதிரிகளுக்குப் பெருஞ் சேதத்தை விளைவிக்கக் கூடியதுமான விடத்தில் ஜனரல் உக்கிரசேனர் தமது பீரங்கிப் படையை மறைத்து வைத்துத் தாம் கட்டளை யிடுமட்டும் பேசாமலிருக்கும்படி திட்டம் செய்திருந்தார். எதிரி

களைச் செயிக்கத் தாம் ஆலோசித்து ஏற்பாடு செய்து எதிர் பார்த்தபடி யாவும் நேரிடவே பூரண ஜயமடைய இதுவே சமயமென் றுணர்ந்து யுத்ததந்திரப்படி நடக்கத் தொடங்கினர்.

எதிரிகளின் பாதுகாப்புச்சேனை பீரங்கிக் குண்டுகளால் சேதமடைந்து தத்தளிப்பதும், அவர்கள் இரு பக்க வாட்டுப் படைகளும் ஓடத்தொடங்கியதுமாகிய சமயத்தில், ஜனரல் உக்கிரசேனர் உடைவாளைக் கையிலேந்தித் தமது மையச் சேனையில் நுழைந்து அதன்முன் அணியில் சென்று எதிரிகளின் மையப் படையைத் தாக்கத் தொடங்கினர்.

அப்போதுதான் சகோதரிகளுக்கு இடி விழுந்தது. நாம் ஜெயமடையமாட்டோம் என்று தோன்றிவிட்டது. ஆயினும் கன்னெஞ்சர்களானதால், தோல்வியடைந்தால் எங்கும் செல்லவிடமில்லை, ஜெயமடையாவிடின் யுத்தகளத்தில் மடிவதேசரி என்று துணிந்து ஓடும் ஆட்களை ஓடவொட்டாது மடக்கிக் கூடியவரையில் ஒன்று சேர்த்துத் தங்கள் மையச் சேனைக்குத் துணை செய்ய முயன்றார்கள். என்ன செய்தாலும் ஜனரல் உக்கிரசேனரைச்செயிக்க யாரால் முடியும். எத்தனை துப்பாக்கிகள் அவரை நோக்கிச்சுடப்பட்டன! அவர் பக்கங்களிலும், சட்டையைத்துளைத்துக்கொண்டும் செவியின் ஓரமாகவும் தோள் பட்டை மேலும் குண்டுகள் பறந்துகொண்டேயிருக்கின்றன. அவர் தன் வாளை ஓங்குந்தோறும் ஒருவரையிருவரை விண்ணுலகிற் குடியேற்றிக்கொண்டு இருபுறமும் சவக் குவியலை யுண்டாக்கிக்கொண்டே தன் படையை யழைத்துக்கொண்டு எதிரிசேனையில் பாதி தூரம் பிளந்து சென்றார்.

உலகநாயகனும் மேஜர் இலக்ஷ்மணனும் பின் தங்

காது அவருடைய பக்க வாட்டுக்களில் சென்று கொண்டே யிருக்கிறார்கள். அச்சமயம் பின்னாலிருந்த உருத்திரப்பன் சில ஆட்களோடு தன் மையப்படைக்குத் துணை சென்றான். சற்று நேரத்திற்குள் அவன் ஜனரல் உக்கிரசேனர் இருக்குமிடத்திற்குச் சமீபத்தில் நெருங்கினான். ஜனரல் அவனைக்கண்டதும் சாந்தமாகவே "ஓ அநீதக்காரிகளுக்கு ஆயுதமாகவிருந்த அக்கிரமக்கள்ளப்பயலே! நீ தண்டனை யடையவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. வா சீக்கிரம்" என்றார்.

கர்னல் உருத்திரப்பன் தைரியத்தில் குறைந்தவனல்ல. ஆகையால் தன் ஆட்களை விலகச்செய்து ஜனரலின் எதிரில் வந்து, "உனக்கே இப்போது ஆயுள்முடிந்துவிட்டது" என்று தன்வாளை யோங்கினான். ஜனரல் சட்டென்று விலகிக்கொண்டு சாந்தமாகவே "விஷயம் அப்படியல்ல; உன்னைத்தூக்கில் போடவொட்டாமல் மன்னிக்கும்படி செய்தவன் நான். நீ அப்போது செய்த சத்திய வாக்குத்தவறி மறுபடி இப்பெண் பேய்களோடு சேர்ந்து அக்கிரமச் சண்டைக்கு வந்ததால் நானே உனக்கு இப்போது மரணதண்டனை யளிக்கவேண்டியது நியாயம்." என்றார்.

இரண்டு சேனாதிபதிகளுக்கும் சண்டை தொடங்கவே இருபுறச் சேனைகளும் ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள் போல் விலகிப் பேசாமல் நின்று பார்க்கத் தொடங்கினார்கள். சுமார் ஐந்து நிமிடகாலம் ஜனரல் உக்கிரசேனர் உருத்திரப்பன் கத்தி வீச்சுக்களையும் குத்துக்களையும் இலேசாக ஆயாசமின்றி நின்ற இடம் விட்டுப்பெயராமலே தட்டிக்கொண்டிருந்து பிறகு திடீரென்று தமது வாளைத் தலைக்குமேல் அரைவாட்டமாகச்சுற்றி "அக்கிரமமாக நிரபராதிகளைச் சிறையிலடைக்கக் கதவைத்திறக்கும் இடது கரத்தி

ர்கு இது தண்டனை'' என்று கூறியதும் அதே விநாடி உருத்திரப்பனுடைய இடது கரம் புயத்திலிருந்து முழங்கை வரை எலும்பு தெரியும்படி நெடுகப்பிளவுண்டு இரத்தம் பெருகியது. அவன் அடியுண்ட வேங்கை போல் வீறிட்டு ஜனரலை வெட்ட வாளை வீசினான். ஜனரல் "இது என்னை நித்திரையில் கயிற்றால் கட்டிய வலது கைக்குத்தண்டனை'' என்றதும் வலது கையும் இடது கரத்தைப்போலவே பிளவு படச்செய்ததும் வாளைச் சிரசிற்கு மேல் வட்டமாய்ச்சுற்றி "இது துஷ்டமாதர்களுக்குத் துராலோசனை கூறிய சிரசிற்குத்தண்டனை'' என்று கூறிக்கொண்டே வாளை நேரே யிறக்கினார். காப்டன் உருத்திரப்பன், சிரம் கழுத்துவரை இரண்டாய்ப் பிளக்கப்பட்டுச் சவமாய்த் தரையில் வீழ்ந்தான்.

உடனே எதிரிகள் சேனையில் மிக்க மனச்சோர்வும் பீதியும் உண்டாய் விட்டன. கற்பகம் இனி நமக்கு ஜெயமில்லை யென்றுணர்ந்து மிக்க கோபமும் ஆத்திரமுமடைந்து நேராய் ஜனரல் உக்கிரசேனரோடே யுத்தம் புரிவததென்று வெறிகொண்டவள் போல் தன் குதிரையை நடத்திக்கொண்டு அவர் முன் வந்து வாளை யோங்கினாள். ஜனரல் உக்கிரசேனர் "சே சே ! நான் பெண் பிள்ளையோடு சண்டை யிடுவதில்லை'' என்றார். அதே சமயம் தற்செயலாய் ஒரு துப்பாக்கிக்குண்டு அவள் மார்பில் ஊடுருவிச்சென்றது. அவள் ஆ என்றதும் பூமியில் விழுந்து மடிந்தாள்.

இதைக்கண்ட சேனைகள் பின்னும் கலக்கமடைந்து விட்டார்கள். தன் தமக்கை யிறந்ததை யறிந்த சண்பகம் தன் படைகளில் ஓடுகிறவர்களைத் தடுக்க முயன்றாள். அவள் இனி ஜெயிக்க முடியாதென்றறிந்ததே மிக்க கோபாவேசங்கொண்டு தன் ஆட்களை மடக்கித் திருப்ப

முயன்றாள். அவர்களோ கண்மண் தெரியாமல் ஓட முயன்றார்கள். இவள் பேச்சையும் பயமுறுத்துதலையும் செவியிற்போட்டுக் கொள்ளவில்லை. அக்குழப்பத்தில் அவள் குதிரை சவங்களில் கால் சிக்கிக்கொண்டு இடறிய போது அவள் கீழே வீழ்ந்து விட்டாள். பின்னால் துரித மாக வரும் குதிரை வீரர்கள் எதிரிகள் தொடர்ந்து வருவ தைத் திரும்பிப்பார்த்துக்கொண்டே தங்கள் குதிரைகளை வேகமாகச் செலுத்தியதால் முன் இருக்கும் விஷயத்தைக் கவனிக்கவில்லை. அதனால் சண்பகம் இரண்டு மூன்று நிமி டங்களுக்குள் குதிரைகளால் மிதித்துத் துவைக்கப்பட்டு உருவின்றிய ஒரு மாமிசபிண்ட மாக்கப்பட்டாள்.

ஜனரல் உக்ரசேனரோ சற்றும் சலிக்காமல் இரண களத்தைப் பிணக்காடாக்கிக்கொண்டு வருகிறார். துளசி பாய் தன் சகோதரிகள் இருவரும் அடைந்த கோரமரணத் தைக்கேட்டதும் பித்தம் பிடித்தவளாகி ஓடும் தன் படை களைத்தடுக்க முயன்றாள். முடியவில்லை. யாவரும் கண் மூடித்தனமாய் ஓட்டமெடுத்ததால் இவளும் திரும்பமுடி யாமல் வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோகப்படும் துரும்பு போல் தள்ளிக்கொண்டு போகப்பட்டாள். அவள் சொல்லொணா மனக்குழப்பத்தால் தன் சேனை களில் காயம் பட்டு விழுந்து வருந்திக்கொண்டிருப்பவர் கள் மேல் காருண்யமின்றித் தன் குதிரையைச்செலுத்திக் கொண்டு சென்றாள்.

அச்சமயம் துளசிபாயின் குதிரை தொடைமுறிந்து வேதனைப்படும் ஒரு போர் வீரனுடைய இடது தோள் மேல் காலை வைத்துச்செல்லும் போது, அவன் கோப மடைந்து வலது கரத்திலிருந்த ஈட்டியால் துளசிபாய் ஏறிச்செல்லும் புரவியின் வயிற்றில் குத்திவிட்டான். அந்த நோயால் குதிரை வெறிகொண்டு ஓடுகிற அனேவரை

யும் தாண்டிக்கொண்டு வாயுவேகமாய்க் கைக்கடங்காமல் ஓடியது. துளசிபாய் உறுதியாகச்சேணத்தில் உட்கார்ந் திருந்தாள். பத்து நிமிடங்களுக்குள் அக்குதிரை ஒரு பெரிய மேட்டின் மேல் அதிவேகமாக ஏறிச்சென்றது. நூற்றுக்கணக்கான வீரர்கள் அவளையே நோக்கிக் கொண் டிருந்தார்கள். அக்குதிரை அம்மேட்டின் உச்சிக்குச் சென்றதும், திடீலென்று குதிரை ஆள் இருவரும் மாயமாக மறைந்து விட்டார்கள். பிறகு யாவரும் அம்மேட்டினுக் கருகிற்சென்று பார்த்தபோது பக்கத்திலிருந்த மிக்க ஆழ மான பாதாளத்தில் குதிரையும் அவளும் விழுந் துமடிந் திருக்கக்கண்டார்கள்.

சரியாகப் பகல் உச்சிவேளைக்கு ஜனரல் உக்கிரசே னர் இரணகள முழுமையும் தமக்கு ஒருவரும் எதிரின்றி ஜெயசீலராக விளங்கினர். இவ்வளவு போரிலும் அவருக் காவது, உலகநாயகன், மேஜர் இலக்ஷ்மணன், பிரேம நாதன், கேசவன் இவர்களுக்காவது ஒரு காயங்கூடப் பட வில்லை. எதிரிகளின் ஏராளமான யுத்ததளவாடங்கள், உணவுப் பொருள்கள் யாவும் இவர்கள் கையில் சிக்கின.

இச்சங்கதி கேட்டதே வெண்கலக் கோட்டையில் ஜெயபேரி முழங்கியது. ஜனரல் உக்கிரசேனர் உடனே கீழ்க்கண்ட ஒரு விளம்பரம் எழுதி நகரமுழுதும் பறை யறைவித்து, அதை யாவரும் அறியச் செய்ததோடு அத் தீவு முழுதும் அவ்விளம்பரம் பகிரங்கமாகும்படிச் செய் தார்.

"மங்களத்தீவின் அரசனுகிய வீரரத்தினம் என்கிற நான், என் பூமியில்வசிக்கும் யாவருக்கும் இதனுல் தெரி வித்துக் கொள்வதென்னவெனில்:—

இப்போது நாம் சொல்பஆட்களை வைத்துக்கொண்டு அடைந்த ஜெயத்தால் கடவுளின் ஆசீர்வாதமும் நீதியும்

யாரிடம் இருக்கிறதென்பதை நீங்கள் நன்ருய் அறிந்து கொள்ளலாம். என் தந்தை வியாதியால் நான் இங்குவரு முன்பே உயிர்துறந்து இருந்தார். வைத்தியர் பாஷாணத் தால் கொல்லப்பட்டிருந்தாரென்று பின்னல் தெரியவந் தது. உலகப்பிரசித்திபெற்ற ஜனரல் உக்கிரசேனர் நீதியில் லாக் கட்சியில் ஒரு போதும் சேரார் என்ற ஒரு உண்மை யே உங்களுக்கு யாவற்றையும் விளக்கும். மற்ற சங்கதிகள் என் சகோதரிகளின் அகௌரவமான நடக்கைகளை வெளி யிடுமாதலால் அவற்றைப் பகிரங்கமாகத் தெரிவிக்கவில்லை. அறிய விரும்புவோர் நமது நகரவாசியாகிய காப்டென் கேசவனையும் மாரியாயியையும் கேட்டறியலாகும். நான் நமது தீவின் பழைய ஆசார வழக்கங்களை மாற்றக்கருதி னேன் என்ற வதந்தி அடியோடு பொய் என்பது இனி அனுபவத்தில் தானே விளங்கும். அதற்குமாருக இனி ஜனங்களுக்கு எவ்வித பீதியாவது இடையூருவது இன்றி யாவரும் க்ஷேமமாக இருக்கும் வண்ணம் எல்லா ஏற்பாடு களும் செய்யப்படும். இப்போது மதிமயங்கிப் பொய் வார்த்தைகளை நம்பி என் சகோதரிகளோடு சேர்ந்து யுத் தத்திற்கு வந்த அனைவரும் பூரணமாக மன்னிக்கப்பட் டார்கள்.

மேற்கூறப்பட்ட யாவும் சத்தியமொழிகளே என்ப தற்கு அத்தாட்சியாகக் கனம் பொருந்திய ஜெனரல் உக்கிர சேனரும் இதில் கையொப்பம் வைத்திருக்கிருர்.

இந்த விளம்பரம் அனைவர்க்கும் மனத்திருப்தியையும் சந்தோஷத்தையும் அளித்தது. ஜனரல் உக்கிரசேனர், உலகநாயகன், மேஜர் இலட்சுமணன், பிரேமநாதன் முத லியவர்களுக்கு வீரரத்னம் அரசன் மிக்க நன்றி பாராட்டி ஞரென்று நாம் கூறவேண்டியதில்லை.

## 57-வது அத்தியாயம்.

அரியநாதம் பிரபுவின் மனக்கலக்கம்—பிரபுவும் அந்தரங்க ஆளான பெரியண்ணனும்—ஜெனரல் உக்கிரசேனரின் கடிதம் ஜகதாம்பாளிடம் சேர்தல்—பிரபுவின் இழிவான நடக்கை—சீமாட்டியின் நிலைமை—பிரபுவின் தந்திரமும் அநீதமுமான நடக்கைகளும்—ஆபத்தில் சரியான உதவி.

---

**மங்களத்தீவில்** முன் அத்தியாயத்தின் இறுதியில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த ஐந்தாவது நாள் மாலை சுமார் ஏழுமணிக்கு இலவணபுரியை நோக்கி மூன்று பேர் குதிரை மேற் சென்றுகொண் டிருக்கிறார்கள். அவர்கள் நெடுந்தூரம் பிரயாணம் செய்துவருகிறார்களென்று அவர்கள் நிலைமையால் அறியலாம். அவர்கள் நகரிற் பிரவேசித்ததும் நேராக அரியநாதம் பிரபுவின் மாளிகையை நோக்கிச் சென்றார்கள். அரசருக்குப் பதில் தவறாக விசுவநாதன் என்பவனைக் கொன்று விட்டதாகக் கர்னல் இரகுநாதர் சிறைசெய்யப்பட்டதினம், குமுதவல்லிச் சீமாட்டியின் மாளிகையில் அவளோடு சம்பாஷித்துக்கொண் டிருந்த அரியநாதம் பிரபு "என் வரையில் நான் உடனே புறப்பட்டு எங்காவது அந்நிய நாட்டிற்குச் சென்றிருந்து, இக்குழப்பம் அனைத்தும் அடங்கி முடிந்த பிறகே வருவேன்'' என்று கூறியது நண்பர் நினைவிலிருக்கலாம். அப்போது சென்ற பிரபு இரண்டு மாதங்கள் கழித்து இப்போதுதான் தமது மாளிகைக்குத் திரும்பி வருகிறார். அவர் அன்று காலையில் துறைமுக நகரிலிருந்து புறப்பட்டார்; கூடவிருக்கும் இருவரும் அவருடைய ஆட்கள்.

மூவரும் மாளிகைமுன் சென்று கதவைத்தட்டியதே

வேலைக்கார ரனைவரும் தமது எஜமானர் வந்துவிட்டதை யறிந்து சந்தோஷத்தா லாரவாரித்தார்கள். கதவுதிறக் கப்பட்டதும் ஆட்கள் ஓடிவந்து, வந்தவர்களின் குதிரை களைப் பிடித்துக் கொண்டு போய் லாயத்தில் கட்டி அவற் றிற்குத் தீனியளிக்கும் வேலையைக் கவனித்தார்கள். குதிரைகளினின்று மிழிந்த மூவரும் மாளிகைக்குள் நுழைந் தார்கள். பிரபு நேராய்த் தம் அறைக்குச் சென்றார். அதற்குள் அவருடைய அந்தரங்க ஆளாகிய பெரியண்ணன் அவர் பின்னால் சென்றான். பிரபு தமது மாசுபடிந்த உடை களைக் களைந்து விட்டு வேறுடையணிந்து கொண்டதே பெரியண்ணன் அவரை நோக்கி, "பிரபுக்கள் யாத்திரை யால் மிக்க ஆயாசமடைந்திருப்பது போல் காண்கிறது" என்றான்.

பிரபு "ஆம், முன்னே ஒரு புட்டி ஒயின் கொண்டு வா" என்றார்.

அவ்வாறே யளிக்கப்பட்ட ஒயினை யருந்திய பின் பிரபு "பெரியண்ணா! இனி நகரத்தில் என்ன விசேடங்கள் நடந்தன? கூறு" என்றார்.

பெரியண்ணன்:—பிரபுவே! தாங்கள் சென்றபின் அப்படி அதிசயமான விசேஷம் ஒன்றும் நடைபெறவில்லை.

பிரபு:—அரண்மனைச் சங்கதிகள் எப்படி?

பெரிய:—அரசரிடம் மதனாம்பாள் சீமாட்டியே இன்னும் செல்வாக்குடையவளாக விருக்கிறாள். இதுகாறும் எப்போது மில்லாத அத்தகைய செல்வாக்கு இப் போது அச்சீமாட்டிக் கிருக்கிறது. அச்சீமாட்டியின் விருப்பமே எந்த விஷயத்திலும் அரசருக்குச் சட்ட மாக விருக்கிறது.

பிரபு:—குமுதவல்லிச் சீமாட்டி?

பெரிய:—அச்சீமாட்டி முன்னைவிட அதிக அவமானமான

நிலைமையிலிருக்கிறாள். இராஜ சபையைச் சேர்ந்த ஒருவரும் அச்சீமாட்டியைக் காணச்செல்வதில்லை. அச்சீமாட்டியும் மாளிகையை விட்டு வெளி வருவதில்லை.

பிரபு:—அந்த இராஜத்துரோகியாகிய கர்னல் இரகுநாதன் தூக்கிற் போடப்பட்டானே?

பெரிய:—"அந்த விசாரணை இன்னும் முடியவில்லை. நாளைக்கு விசாரணை" என்றான்.

இதைக் கேட்டதே அந்த விஷயம் எல்லாம் முடிந்து விட்டதென்று நம்பியிருந்த பிரபு திகிலடைந்தார். "அட இன்னும் விசாரணை முடியவில்லையா?" என்றார்.

பெரியண்ணன்:—"பிரபுவே! அந்தக் கர்னல் பட்சத்தில் பேசும் லாயர் மாசிலாமணிப்பிள்ளை என்னென்னமோ தந்திரமான காரணங்களையெல்லாம் காட்டி விசாரணை முடியவொட்டாமல் பன்முறை வாயிதாக் கேட்டுக்கொண்டிருக்கிறார். இனி வாயிதா கொடுக்கப்படமாட்டாதென்று பிரதமநீதவான் இப்போது உத்தரவு பிறப்பித்திருப்பதாகக் கேள்வி" என்றான்.

பிரபு:—சீமாட்டி எவ்வாறிருக்கிறாள். எங்கேனும் வெளியில் செல்வதுண்டோ?

பெரிய:—பிரபுவே! சீமாட்டி எப்போதும்போல் மாளிகையைவிட்டு வெளிச் செல்வதேயில்லை. எத்தகைய விருந்து கொண்டாட்டத்திற்கும் போவதில்லை.

பிரபு:—இங்கு யாரும் வந்து காண்பதில்லையோ?

பெரிய:—ஆ! இதுகாறும் ஒருவரும் சீமாட்டியைக்காண வந்ததேயில்லை. இன்றுதான் ஒருவர் வந்திருக்கிறார். அவர் இப்போது தான் பத்து நிமிடங்களுக்குமுன் வந்தார். இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்.

பிரபு:—அவர் பெயரென்ன?

பேரிய:—அவர் பெயர் கூறவில்லை. பெயர் கூறினல் சீமாட்டிக்குத் தெரியாது. ஏதோ மிக்க முக்கியமான விஷயம் கூறவந்திருப்பதாகக் கூறு என்றார்.

பிரபு:—அவர் எப்படியிருக்கிறார்?

பேரிய:—"அவரை நான் இதுகாறுங்கண்டதில்லை. சுமார் முப்பது வயதிருக்கும். இப்போதுதான் தங்களைப் போல் நெடுந்தூரப் பிரயாணம் செய்து வந்தவராகத் தெரிகிறது" என்றான்.

பிரபு:—"என்ன? யாரோ புதுமனிதன்-பெயர் கூறுமல்... அதென்ன அத்தகைய சமாசாரம்? இதில் ஏதோ விசேஷமிருக்க வேண்டும்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு, "நான் வந்தசங்கதி சீமாட்டிக்குஅறிவிக்கப்பட்டதோ?" என்றார். பெரியண்ணன் இல்லையென்றான். பிரபு "சரி நானே சென்று சீமாட்டியைக்கண்டு கொள்கிறேன்"என்று எழுந்து சென்றார்.

குற்றமுள்ள நெஞ்சுக்கு அற்பசந்தேகத்தில் பெரும் பீதியுண்டாவது சுபாவம். வந்தவன் தூரப்பிரயாணம் செய்து வந்திருக்கிறனென்றதைக் கேட்டதே பிரபுவின் நினைவு ஜனரல் உக்கிரசேனர்மேல் நாடியது. ஜனரல் தூரத்திலிருந்தாலும் அவருடைய ஆச்சரியமானசாமர்த்தியங்கள் பிரபுவுக்குத் தெரிந்திருக்கிறமட்டில், அவர் எத்தகைய இரகசியங்களையும் அறிந்து கொள்வார் என்ற பீதி பிரபுவுக்கதிகம். மேலும் கர்னல் இரகுநாதரும் உலகநாயகனும் ஜனரலுக்கு மிக்க வேண்டியவர்கள் என்பதும் அவருக்குத் தெரியும். ஆதலால் அவர் எப்படியோ விசுவநாதனுடைய கொலையைப்பற்றிய விஷயத்தின் உண்மையிரகசியத்தையறிந்துகொண்டிருக்கலாகும் என்றுபிரபுவுக்கு இப்போது பீதியுண்டாயிற்று. அதைப்பற்றிய சங்கதியைத் தன் மனைவி மூலமாக வெளியிட ஏதோ ஏற்பாடு நடக்கிறதாக்

கும் என்று எண்ணிப் பூனைபோல் சீமாட்டியின் அறைக்குப் பக்கத்திலுள்ள அறையில் நுழைந்து, இரண்டறைகட்கு மிடையிலுள்ள சாளரத்தருகில் நின்று உற்றுக்கேட்டார். அச்சமயம் அடுத்த அறையில் ஒரு ஆடவன் "இவ்வளவு தான் சீமாட்டியே. ஒரு வாரம் பார்த்து விட்டு அவர் வராதிருந்து, சமாசாரமும் வராமலிருந்தால் தாங்களே யிதைப் பிரித்துப் பார்த்து இதில் கூறியபடி நடந்துகொள்ள வேண்டுமென்பதே அவர் கூறச்சொன்ன சங்கதி. இனி நான் விடை பெற்றுச் செல்கிறேன்" என்று கூறியது கேட்டது.

பிறகு சீமாட்டி:—அவர் கட்டளைப்படி தவிராது நடப்பேன் என்பதில் சற்றும் அய்யமில்லை. ஒருவர் பிராணனைக்காப்பாற்றும் விஷயத்தில் அஜாக்கிரதையாக இருக்கமாட்டேன். தாங்கள் சிற்றுண்டியேனும் அருந்திச்செல்லவேண்டும்" என்று கூறியது கேட்டது.

அந்த ஆடவன்:—"சீமாட்டியே! மிக்க வந்தனம். நான் என் வீடுசேர மிக்க ஆவலுள்ளவனாகவிருக்கிறேன். மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

இவ்வார்த்தைகளும் உடனே ஆள் வெளிச்செல்லும் அரவமும் பிரபுவின் செவிகளில் விழுந்தன.

இவையாவுங் கேட்டபோது அந்த ஆள் ஜனரல் உக்கிரசேனரிடமிருந்தே வந்திருக்கவேண்டு மென்றும், அவன் சீமாட்டி யிடம் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறானென்றும் பிரபுவிற்குப்புலப்பட்டது. பிராணபத் தென்றால் கர்னல் இரகுநாதனுக்காகத்தா னிருக்கும் என்று நினைத்ததே அவருக்கு நடுக்கமுண்டாயிற்று. ஏனெனில் இரகுநாதன் நிரபராதி யென்று ருசுப்படுத்துவதாயின் மெய்யான குற்றவாளியைக்காட்டியே தீரவேண்டும்

என்று பிரபுவின் மனதிற்பட்டதும் அவருக்குப் பெருந் திகிலுண்டாய் விட்டது.

பிரபு ஜகதாம்பாளே மணம்புரிந்தபோது, அவர் அவளே மரியாதையாக நடத்த வேண்டுமென்றும் அவளுக்கு மனவருத்தம்வரும்படி செய்யலாகாதென்றும் ஜனரல் கண்டிப்பாகக் கூறியிருந்தா ரல்லவா! பிரபு, ஜனரல் ஊரிலுள்ள மட்டும் அவ்வாறே நடந்துவந்து, அவர் சென்றதே தன் மனேவியை மிக்க அலட்சியமாக நடத்துவதும், குடும்பத்திலுள்ள அவள் அதிகாரத்தைக் குறைப்பதும், மனத்தாங்கல் உண்டாக்கத்தக்க விதமாகப் பேசுவதுமாக நடந்துவந்தார். அந்தோ! மணம்புரிந்த புருடனுக்குத் துரோகம் செய்து அன்னியனிடம் செல்லும் ஸ்திரீக்கு எங்கேனும் சுகமுண்டோ? இல்லே. கடவுளே இச்சன்மத்திலேயே அவர்களேத் தண்டிக்கிருர். பிறகு இரண்டு மாதங்களுக்குமுன் பிரபு வெளிநாட்டிற்குச் செல்வதாய்க்கூறியபோது சீமாட்டி தானும் வருவதாகக்கூறவில்லே. தன் கணவனுடைய கொடுமைகளே யெல்லாம் அம்மாது பொறுமையோடு சகித்துக்கொண்டிருந்தாள். ஆனல் பிரபுவே கூப்பிடாத வரையில் தான் வலியவருவதாகக்கூற அம்மாதுக்குப் பிரியமில்லே. இவர்களிருவருக்கும் அன்பான ஒற்றுமையில்லே யென்று வேலேக்காரர் அனேவருக்கும் தெரியும். சிலர் அம்மாதின்மேல் இரக்கமுடையவர்களாக இருந்தார்கள். சிலர் பிரபுவுக்குப் பிரியமுண்டாகும் வண்ணம் நடந்து கொண்டார்கள். பிரபுவின் அந்தரங்க ஆளாகிய பெரியண்ணன் சீமாட்டி யிடம் அவளுக்குத் தகுந்தாற்போல் பேசுவதும், பிறகு பிரபு விடம் அம்மாதைப்பற்றி இழிவாக அவருக்குச்சந்தோடமுண்டாகுமாறு பேசுவதுமாக விருந்தான்.

இக்காரணங்களால் பிரபு சுலபமாகத் தன் மனேவி

யிடம் வந்திருக்கும் கடிதத்தின் சங்கதியை யறியமுடியா தென்று தெரிந்து கொண்டார். ஆயினும் எவ்விதத்திலே னும் அதையபகரித்துக்கொள்ள வேண்டு மென்று தனக் குள் தீர்மானித்துக்கொண்டார். இன்னும் ஏழு நாட்கள் அதைத் தன் மனைவி பத்திரமாய்த் தன் அறையில் பெட்டி யில் பூட்டி வைப்பாள் என்பது அவருடைய உத்தேசம்.

இராமநாதன் சென்றதே சீமாட்டி தன் அறைக்குச் சென்றாள். இது காறும் அவள் பேசிக்கொண்டிருந்த அறை யாரேனும் வந்தால் சம்பாஷிக்கும் அறை. சீமாட்டி சென்றதே பிரபு அந்த அறைக்குச் சென்று உட்கார்ந்து ஒருதோழியை வரவழைத்துத் தான் வந்திருக் கும் சமாசாரத்தைச் சீமாட்டிக்கு அறிவிக்கும்படி கூறி னார்.

ஜகதாம்பாள் இரண்டொரு நிமிடங்களுக்குள் தன் கணவனிடம் வந்தாள். பிரபு என்று மில்லாத அன்பு நிறைந்தமொழிகளால் சம்பாஷிக்கத் தொடங்கினார். உலக அனுபவமில்லாத வேறொருமாதா யிருப்பின் ஏமாந்து போயே யிருப்பாள். கபடமும், வஞ்சமும், துஷ்டத் தனமும், அக்கிரமத்திற்கஞ்சாத குணமுமுடைய அரிய நாதம் பிரபுவின் குணத்தை நன்கறிந்த ஜகதாம்பாள் சற்றும் ஏமாறவில்லை. இவன் ஏதோ காரியார்த்தமாக இவ்வாறு நடிக்கிறான் என்று உணர்ந்தாள். ஆனால் கடி தம் வந்த விஷயத்தை யவரறிந்திருப்பார் என்று சந் தேகிக்கச் சீமாட்டிக்கு ஒரு காரணமும் தோன்றவில்லை யாதலால், இன்னவிஷயம் அவர் கருத்திலிருக்கிறதென்று மட்டும் அவளுக்குப்புலப்படவில்லை. ஆயினும் ஏதோ கருத்துக் கொண்டிருக்கிறார் என்று மட்டும் தெரிந்தவரை யில், அவர் நடவடிக்கைகளைச் சாக்கிரதையாகக் கவனிக்க வேண்டு மென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள்.

பிறகு சமயங்களில் பிரபு குறிப்பாய்க் கூறிய விஷயங்களால் கர்னல் இரகுநாதரைப்பற்றி வந்திருக்கும் கடிதத்தை யபகரிக்கவே பிரபு எண்ணங்கொண்டிருக்கிருரென்றும், அவர் எவ்வாருே அதை யறிந்துகொண் டிருக்கிருரென்றும் ஜகதாம்பாள் அறிந்து கொண்டாள். பிரபுவின் கபட நடக்கையை நன்ருக அறிந்து கொண்டாள். அந்த விவரங்களை யெல்லாம் கூறுவது அனுவசியம். ஆகையால் முடிவில் நடந்த விஷயத்தைக் கூறுவோம்.

அரியநாயகம் பிரபு வந்து ஒரு வாரம் ஆயிற்று. ஜனரல் உக்கிரசேனருடைய கடிதம் வந்து எட்டாவது நாள் பிறந்தது. ஆகையால் அக்கடிதத்தைப் பிரித்துப்பார்க்கும் வேளை வந்து விட்டது. இதற்கிடையில் பிரபு பன்முறை தந்திரமாக அக் கடிதத்தைப்பற்றி ஜாடையாய்க் கேட்டும் ஜகதாம்பாள் ஒன்றும் கூறவில்லை. ஒரு சமயம் பிரபு தன் மனைவியை நோக்கி "ஜனரல் உக்கிரசேனரிடமிருந்து ஏதேனும்சங்கதி தெரிந்ததா?" என்று கேட்டார். ஜகதாம்பாள் ஆம் ஒரு முறை வந்தது என்று மட்டும் கூறினளே யன்றி வேருென்றும் கூறவில்லை. பிரபுவின் தந்திர சாமார்த்தியம் எதுவும் பலிக்கவில்லை.

எட்டாவது நாள் மாலை ஏழுமணிக்கு ஜகதாம்பாள் அக்கடிதத்தை வாசித்துப்பார்க்கக்கருதி மிக்க கஷ்டத்தோடு போஜன சாலையில் ஒயின் அருந்திக்கொண்டிருக்கும் தன் கணவரை விட்டுப்பிரிந்து தன் அறைக்குச் சென்று கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு பெட்டியிலிருந்த கடிதத்தை யெடுத்துக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தாள். அச்சமயம் யாரோ கதவைத்தட்டுவதைக் கேட்டு யாரங்கே என்ருள். பிரபு நான்ருன் கதவைத்திற. ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும்" என்ருர். பிரபுவின் கருத்தும் யோக்கியதையும் அவள்

நன்கறிவாள். ஆகையால் அவனிடம் தனியே சிக்கிக் கொள்ளலாகாதென்று கருதி, "என்ன சங்கதி பேசவேண்டும்? நான் இச்சமயம் தனியேயிருக்க விரும்புகிறேன்" என்றாள்.

பிரபு:—"இங்கு வெளியில் நின்று கொண்டு எப்படிக் கூறுவது. அது ஆலசியமின்றி யுடனே பேசவேண்டிய விஷயம்" என்றார்.

சீமாட்டி "அப்படியாயின் இரண்டு நிமிடங்களில் நான் கூடத்திற்கு வருகிறேன். தாங்கள் சென்றிருங்கள்" என்றாள். ஏனெனில் தானிருக்கு மறை மற்ற வேலைக்காரர்கள் முதலியவர்கள் நடமாடுமிடங்களுக்குத் தூரத்திலிருப்பதால் துராக்கிருதமான விஷயம் ஏதேனும் நேர்ந்தால் கூச்சலிட்டால்கூட யாருக்கும் கேட்காது. ஆகையால் அங்கு பிரபுவோடு தனியே சம்பாஷிக்கலாகாதெனக் கருதினாள்.

சீமாட்டி கடிதத்தைப் பத்திரமாகத் தன் உள் மடியில் வைத்துக் கொண்டு கூடத்திற்குச் சென்று பிரபு மேஜையின் முன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவர் தன் பக்கத்திலிருக்கும் நாற்காலியைச் சுட்டிக்காட்டி அதில் உட்காரும்படி சீமாட்டிக்குச் சமிக்கை செய்தார். சீமாட்டி யங்குட்காராமல் மேஜையின் எதிர்ப்பக்கமுள்ள ஒரு நாற்காலியிலுட்கார்ந்தாள்.

பிரபு:—"ஜகதாம்பாள்! நான் வெளி நாட்டிலிருந்தபோது சாவதானமாகச் சிந்தித்ததில், நாம் இருவரும் அன்போடும் ஒற்றுமையோடும் இருப்பதே நலம் என்று தோன்றியது. அதனால் நான் வந்தது முதல், இந்த ஒருவாரமாக, இதுகாறும் உன்னிடம் நடந்துகொண்ட அசட்டையான மாதிரிக்கு ஈடுசெய்ய, எவ்வளவோ அன்பு காட்டி நடந்து வருகிறேன். அப்

படியிருந்தும் நீ முன் போலவே குரோதத்தோடு நடந்து வருகிறாய். மனவொற்றுமையோடு நடக்கப் பிரியப்படாமலே யிருக்கிறாய்'' என்றார்.

சீமாட்டி:—பிரபுவே! மாதங்கள் கணக்காய் வெறுப்போடும், குரூரத்தோடும், அகௌரவமாகவும் நடத்தியதற்கு ஒரு வாரமாக அன்போடு நடந்து கொள்வது போதாது.

பிரபு:—நீ என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

சீமாட்டி:—பிரபுவே! தாங்கள் அன்பு காட்டி நடப்பது அபிநயமேயன்றி மெய்யல்ல என்று தங்கள் முகத்தின் முன் நான் கூறுவது தகுதியல்ல. உண்மையாகவே தாங்கள் என்னிடம் அன்போடு நடந்து கொள்வதாகவே யிருக்கட்டும். அந்த அன்பு சமயோசிதத்தைக் கருதி ஏதோ சுயநலத்திற்காகக் காட்டும் அபிநயமாக விராமல் உண்மையானதாகவும் நிலையானதாகவும் உள்ளது என்று என் மனதிற் புலப்படும்படி செய்தால் நான் தங்களிடம் என் உயிரினும் இனிய அன்பு காட்டி மெய்யான பக்தியோடு அடிமைபோல் நடந்து கொள்வேன் என்பது சத்தியம்.

பிரபு:—ஆ! நீ என் வார்த்தைகளை நம்பவில்லை. மனமொருமித்து நடப்பதில்லை. நீ எனக்குத் தெரியாமல் இரகசியம் வைத்துக்கொண் டிருக்கிறாய்.

சீமாட்டி:—இருக்கலாம். ஆனால் அத்தகைய இரகசியம் எனக்கு அகௌரவத்தை யுண்டாக்கத்தக்கதாகவாவது தங்களுக்கு அவமானத்தை உண்டாக்கத்தக்கதாகவாவது ஒரு போது மிராது.

பிரபு:—"அன்று நான் ஊரிலிருந்து திரும்பி வந்தபோது, உன்னைக் காண்பதற்காக உன் சம்பாஷணை அறைக்கு

வந்தேன். அச்சமயம் யாரோ அங்கு உன்னேடு பேசிக்கொண் டிருந்தார்கள். 'அரக்கு முத்திரை யிட்ட கடிதம். ஒரு வாரம் கழித்துப் பிரித்துப் பார்க்கவேண்டும். பிராணபத்தை விலக்கும் விஷயம்' என்று இரண்டொரு வார்த்தைகள் என் செவிகளில் வீழ்ந்தன. நான் என்னை யறியாமலே அங்கு நின்றேன். உற்றுக் கேட்கவேண்டு மென்று நான் கருதவில்லை. தற்செயலாய் என் செவிகளில் வீழ்ந்த வார்த்தைகளால் இராமநாதன் என்ற அந்த ஆள் ஜனரல் உக்கிரசேனரிடமிருந்து வந்ததாகவும், அக்கடிதம் கர்னல் இரகுநாதனை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக வென்றும் தெரிகிறது. அதில் என்ன சமாசார மிருக்கிறதோ? எத்தகைய சங்கதியோ? ஒரு சமயம் நீ யதை வாசித்துப்பார்த்திருக்கலாம்...'' என்றதே,

சீமாட்டி:—''இல்லை. நான் அதை வாசித்துப்பார்க்கவில்லை. ஆயினும் இராமநாதர் கூறியவாற்றால் அந்தக் கர்னலைக்காப்பாற்றும் சீவகாருண்யமான ஒரு சமாசாரத்தைப்பற்றியே யதில் எழுதியிருக்கிறதன்றி வேறொன்று மில்லையென்று நான் உறுதியாகக்கூறுவேன்'' என்றாள்.

பிரபுவோ குற்றமுள்ள நெஞ்சுடையவராகையால், கர்னல் இரகுநாதனைக்காப்பாற்றுவதானல் உண்மைச்சங்கதி வெளி வந்து விடுமே யென்று திகிலும் மிக்க கலவரமுமடைந்தார். அவர் தடுமாற்றத்தோடு,

''அதனல் எனக்கு எவ்வளவு கெடுதி நேரிடுமோ தெரியாது. அக்கடிதத்திலுள்ள சங்கதிகள் எத்தகைய ஆபத்தை யுண்டாக்கு மென்பது தெரியாது. இப்போது என் ஆஸ்தி முழுமையும் பறி முதல் செய்யப்பட்டு நான்

சிறையாக்கப்பட்டால் அதனுல் உனக்கு அவமானமும் கெடுதியும் நேராதா?" என்ருர்.

இம்மொழிகளைக் கேட்ட சீமாட்டி மிக்க வியப்பும் கலக்கமுமடைந்து "கர்னல் இரகுநாதர் மீட்கப்படுவதற்கும் உமது சமாசாரங்களுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்பது எனக்கு விளங்கவில்லையே" என்ருள்.

பிரபு:—"நான் குமுதவல்லிச் சீமாட்டியின் கட்சியைச் சேர்ந்தவன். ஜனரல் உக்கிரசேனர் மதனும்பாள் கட்சியைச் சேர்ந்தவர். அந்தோ அக்கடிதத்திலுள்ள சங்கதிகளால் எனக்குப் பிராணுபத்தே நேர்ந்தாலும் நேரலாகும். அந்தோ! எனக்கிருக்கும் ஆபத்துகள் இத்தகையவையென உனக்குத் தெரியாது. ஆம் எப்படித் தெரியும், தெரியாது..." என்றதே,

சீமாட்டி:—தாங்கள் வீணுகவே பயந்து கொள்கிறீர்கள். அப்படித் தாங்கள் பிராணனுக்கே பயப்படவேண்டிய இக்கட்டில் சிக்கியிருந்தாலும், ஜனரல் எழுதிய கடிதத்தில் உமது சம்பந்தமாய் ஒரு வார்த்தைகூட இராது. அது கர்னல் இரகுநாதரின் ஆபத்தை மட்டும் பொருந்தியதே என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

பிரபு:—"இல்லை யில்லை. அக்கடிதத்தைப் பார்த்தால்தான் அதிலடங்கிய சங்கதிகள் எவ்வளவு தூரம் எனக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதென்றும், எது வரையில் என் விஷயத்தில் சம்பந்தப்பட்டதென்றும், இல்லை யென்றும் தெரியும். அக்கடிதத்தை நீ காட்ட வேண்டும்" என்று கூறிக்கொண்டே ஆத்திரத்தோடெழுந்து சீமாட்டியினருகில் வர இரண்டடி முன்னுக்கு வந்தார்.

சீமாட்டி மிக்க கோபத்தோடு எழுந்து நின்று,

"இதோபாரும். உமது வாக்காலேயே நீர் நாங்கள் பேசும் போது அங்கு வந்து அயோக்கியத்தனமாக உற்றுக் கேட்டு ஜனரலிடமிருந்து கடிதம் வந்த சங்கதியைத் தெரிந்துகொண்டதாக ஒப்புக்கொண்டீர். அது இரகசியக்கடிதமாக விருக்கவே ஜனரல் இராஜத்துரோகமான விஷயம் ஏதேனும் எழுதி யிருப்பார். இதன் மூலமாக அவர் மேல் கொடிய வஞ்சந் தீர்த்துக்கொள்ளலாம் என்று ஆவல் கொண்டீர். உண்மையில் கர்னல் இரகுநாதர் காப்பாற்றப்படுவதால் உமக்கேன் ஆபத்து நேரிடுகிறது? அக்கடிதத்தைக் கைப்பற்றவே என்னிடம் அன்போடு நடப்பதுபோல் அபிநயித்தீர். ஆதிமுதலே உமது நயவஞ்சகத்தை நான் உணர்ந்தே ஜாக்கிரதையாக விருக்கிறேன். உம்முடைய வஞ்சம் சூது தந்திரம் எவற்றாலும் காரியம் பலிக்கவில்லை. அக்கடிதம் உம்மிடம் சிக்கவில்லை. ஆகவே கடைசியில் உமது கபட எண்ணத்தைப் பகிரங்கமாய் வெளியிட்டு விட்டீர். துராக்கிருதமாக என்னிடமிருக்கும் கடிதத்தைப் பிடுங்கிக்கொள்ள நினைக்கிறீர். அது சுலபமாய் நடக்கத்தக்க காரியமல்ல. நான் மிக்க துணிகரமானவளென்று எண்ணிக்கொள்ளும்" என்றாள்.

பிரபு:-சே! அப்படித் துராக்கிருதமாக நடக்கும் எண்ணம் எனக்கில்லை.

சீமாட்டி:—"அப்படியானால் நான் என்னறைக்குச் செல்வதைத் தடுக்காமலிரும்" என்று திரும்பினாள்.

பிரபு:—"ஓ! இவ்விஷயம் இவ்வாறு முடியலாகாது; நில். நல்ல தனத்தில் நீ கொடாதவரையில் இப்போது நான் கட்டளை யிடுகிறேன். சீக்கிரம் அக்கடிதத்தையென்னிடம் கொடு. இன்றேல் என் வேலைக்காரருக்குக்கட்டளை யிட்டு உன்னிடமிருந்து அதைப்பிடுங்

கும்படி செய்வேன்'' என்று மிக்க ஆங்காரத்தோடு கூறினர்.

சீமாட்டி பிரபுவின் நடக்கைக்காக மிக்க மனவருத்த மடைந்தாலும் தைரியத்தோடு "ஒருகாலும் கொடுக்க மாட்டேன்'' என்ருள். பிரபு உடனே தன் ஆட்களைக்கூப் பிடவே பெரியண்ணனும் இன்னொருவனும் அங்கு வந்தார் கள். பிரபு அவர்களை நோக்கி "இவள் மடியில் வைத்திருக் கும் அரக்கு முத்திரையிட்ட கடித உறையைப் பிடுங்குங் கள்'' என்ருர். அவர்கள் சீமாட்டியை நெருங்கும்போது சீமாட்டி பிரபுவை நோக்கி "ஓ கோழைமனிதனே! அந்தச் சுத்தவீரராகிய ஜனரல் உக்கிரசேனர் இப்போது உன் எதி ரில் இருந்தால் இப்படிச் செய்ய உனக்குத் தைரியமுண் டா?'' என்று கூவினள்.

அதே வினடி அக்கூடத்தின் கதவு படீர் என்று திறக் கப்பட்டதும் ஜனரல் உக்கிரசேனரே யுள்ளே வந்தார். அவரைக்கண்டதே பிரபு கருடன் கையில் சிக்கிய நாகம் போல் ஆவிசோர்ந்து விட்டார். ஜனரல் உக்கிரசேனர் சிங் கம்போல் கர்ச்சித்து "இதென்ன சம்பவம்? ஒரு ஸ்திரீயின் மேல் இப்படிக் கோழைத்தனமாய் இரண்டு வேலைக்காரப் பயல்கள் துராக்கிருதமாகப் போர் தொடுப்பது. அதுவும் அவளுடைய சொந்தக் கணவன் முன்னிலையில்'' என்று அதட்டிக் கேட்டார்.

வேலையாட்கள் அவரைக் கண்டபோதே அச்சீமாட் டியின் மேல் நீட்டப்பட்ட கரத்தை இழுத்துக் கொண்டார் கள். பிரபு பேசமுடியாமல் முதலில் தன் மனைவியையும் பிறகு ஜனரலையும் மாறி மாறி மிரண்ட பார்வையோடு நோக்கினர்.

ஜனரல் வேலையாட்களை நோக்கி "கோழை எஜமா னுக்குத் தகுந்த கோழைக் கழுதைகளே! சீ போங்கள்

வெளியே!'' என்று வெறுப்போடும் கோபத்தோடும் வாயிற்படியைச் சுட்டிக் காட்டினர். அவர்கள் தலை குனிந்தபடி விட்டாற் போதுமென்று ஓடிவிட்டார்கள். ஜனரல் பிறகு சீமாட்டியை நோக்கி "சீமாட்டியே! இனி நீதான் இந்த அக்கிரமச் செயலின் விவரத்தைக் கூறவேண்டும். ஆ வேண்டாம் வேண்டாம். தன் கணவனுடைய அயோக்கியத் தனமும் கோழத்தனமுமான நடக்கையை ஒரு ஸ்திரீயே தன் வாயாற் கூறும்படி செய்வது சரியல்ல. பிரபுப்பட்டம் பெற்ற இவரே அதைக்கூறட்டும்'' என்றார்.

---

## 58-வது அத்தியாயம்

ஜேனரல் உக்கிரசேனரும், அரியநாதம் பிரபு ஜகதாம்பாள் சீமாட்டியும்—ஜேனரல் ஜகதாம்பாளுக் கெழுதிய கடிதம்—ஜேனரலும் பிரபுவும்—மூன்று ஆசாமிகள்—ஜனரல் உளவறியும் சாமார்த்தியம்.

---

பிரபு சற்று தியங்கிய பின் ஒருவாறு சற்று மனந் தேறி "ஜனரல்! புருடன் பெண்சாதிக்குள் சச்சரவு நேர்ந்திருக்கும் போது மூன்றுவது மனிதன் அதில் தலையிடுவது ஒழுங்கல்லவென்பது தாங்கள் அறியாதனியா மல்ல...'' என்றார்.

இம்மொழிகளைக் கேட்ட ஜனரல் உக்கிரசேனர் மிக்க கோபமும் வெறுப்புமடைந்து "ஐயா! மூன்றுவது மனிதன் இடையில் பிரவேசிக்கலாகாது என்று பரமயோக்கியர்போல் நியாயம் பேச உமக்குத் தைரியமிருக்கிறதா! புருடன் மனைவிக்குள் சாதாரணமாக நேரிடும் சச்சரவாயின் நான் பிரவேசிக்கமாட்டேன். இது அப்படியல்ல.

ஒருமாதை இழிவான வேலைக்காரப் பயல்கள் இருவர் தூராக்கிருதம் செய்வதும் அதை மிக்க யோக்கியமான கணவன் எதிரிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பதும், இது நல்ல சச்சரவல்லவா? அந்தப் பயல்கள் என்னைக் கண்டதாலேயே பயந்து நின்று விட்டதால் தப்பினார்கள். இன்றேல் இருவரையும் பட்ட மரங்கள்போல் தரையில் வீழ்த்தி எனது சப்பாத்துக் காலால் உதைத்து, வெளியில் தள்ளியிருப்பேன். நீ என்னதான் பிரபுவானாலும் உனக்கும் அதே மரியாதை கிடைத்திருக்கும். இன்னொரு விஷயத்திலும் உனது நடக்கை அக்கிரமமும் அசத்தியமுமானதாகவே யிருக்கிறது. அதாவது கடந்த வருடம் இதேமாதத்தில் உங்களுக்குக் கலியாணம் நடந்தபோது, நீ இந்தம்மாளை மரியாதையோடு நடத்த வேண்டுமென்றும், அக்கிரமமாவது அவமரியாதையாவது செய்யலாகாதென்றும், இவளை யென் சொந்தச் சகோதரியாகப் பாவித்து இவளுடைய க்ஷேமத்தில் நான் கண்ணுள்ளவனாக இருப்பேனென்றும் கூறினேன். நீ யப்படிச் செய்வதாகச் சம்மதித்தாய். இப்போது உன்னுடைய கொடிய அக்கிரமச் செயலை நானே கண்ணுற்காண நல்ல சமயத்தில் இங்கு வந்து விட்டேன்'' என்றார்.

பிரபு:—ஜனரல்! வீணாக அன்னிய விஷயங்களைப்பற்றிப் பேசுவது வேண்டாம். என்னைப்பற்றிய விஷயம் ஏதேனும் உமக்குத் தெரிந்திருந்தால் எடுத்தேயதைக் கூறிவிடும்'' என்றார்.

சீமாட்டி:—"அக்கடிதம் கர்னல் இரகுநாதர் விஷயத்தைப் பற்றியே யன்றி அதில் உமது சம்பந்தமான ஒரு சமாசாரமுமில்லை யென்று நான் கூறினேனல்லவா? இப்போது இவர் வாயாலேயே அதை வேண்டுமானால் கேட்டுக்கொள்ளும்'' என்றாள்.

ஜனரல் உக்கிரசேனர் அம்மொழிகளைக் கேட்டதே "ஓ கோ! தெரிந்து கொண்டேன். அக்கடிதந்தான் இவ்வளவு சேஷ்டைக்குங் காரணமாக விருந்ததோ. என் கடிதத்தால், சீமாட்டியே! உனக்கு இவ்வளவு கஷ்டங்கள் நேர்ந்ததற்காக மிக்க விசனிக்கிறேன். மேலும் அதை நீ உன் கணவரிடம் கூறியதற்காகவும் விசனிக்கிறேன்'' என்றார்.

சீமாட்டி:—"இல்லை யில்லை. என் மேல் அத்தகைய சந்தேகம் கொள்ளவேண்டாம். நான் தங்கள் கட்டளையை மீறி யொருபோதும் நடவேன். நான் இதைப்பற்றிப் பிரபுவிடம் கூறவில்லை'' என்று மனத் துடிப்போடு மொழிந்தாள்.

ஜனரல்:—ஆ! சற்று நான் அத்தகைய சந்தேகங் கொண்டதற்கு என்னை மன்னிக்க வேண்டும். இப்போது தெரிந்து கொண்டேன். இப்பிரபு எப்படியோ அயோக்கியத் தனமாய் அக்கடிதம் வந்திருப்பதையறிந்து கொண்டார். நான் உனக்கு இரகசியமாக அக்கடிதம் அனுப்பியதற்குத் தக்க காரணங்கள் இருக்கின்றன. இவ்விஷயத்திற்காக ஒரு ஆள் நேராய்ச் சென்று அரசரைக்காண வேண்டும். தகுந்த அந்தஸ்திலிருப்பவர்கள் சென்றால் தான் அரசன் பேட்டி கிடைக்கும். இரண்டாவது, இவ்விஷயத்தில் இரண்டு ஸ்திரீகள் மிக்க வியாகூலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மரியாதையான ஒரு ஸ்திரீ தான் அவர்களுக்குத் தேறுதல் கூறலாகும். மூன்றாவதாக, நான் எழுதிய கடிதங்களில் இரண்டு பெரிய இரகசியங்களிருக்கின்றன. பூரணமாக நம்பத்தக்க யோக்கியருக்கே அதைத் தெரிவிக்கலாகும். நான் உன் விஷயத்தில் ஏதோ சொல்ப உதவி செய்திருப்ப

தால் எனக்கு இவ்வுதவி செய்யும்படி உன்னைக்கேட்கத்தான் எனக்குச் சுதந்திரமுண்டு. இத்தகைய காரணங்களில்லா விட்டால் நான் இதை யுனக்கனுப்பமாட்டேன்'' என்றார்.

சீமாட்டி:—சகோதரரே! நான் கட்டாயம் தங்கள் கட்டளைப்படி செய்யச் சித்தமாகவே யிருந்தேன். இனியும் செய்வேன். இப்போது தாங்களே நேரில் வந்துவிட்டதால் ஒரு சமயம் தாங்களே அவ்வேலையைச் செய்து கொள்வீர்களோ என்று ஐயுறுகிறேன்.

பிரபு:—"உனக்கு மிக்க வந்தனம். நீ செய்வாயென்ற நம்பகம் எனக்குண்டு. ஆயினும் இப்போது நானே வந்து விட்டவரையில் அக்கஷ்டம் இன்னொருவருக்கு வேண்டாம்; எதோ அக்கடிதத்தைத் தா?'' என்றார்.

சீமாட்டியுடனே தன் மடியிலிருந்த அக்கடித உறையையெடுத்து அவரிடமளித்தாள்.

ஜனரல் உக்கிசேனர் அந்த உறையை வாங்கிப் பிரித்துப் பிரபுவை நோக்கி "இதோ இதற்குள் இருக்கும் கடிதங்களின் மேல் விலாசங்களைப் பாரும். இதோ இது அரசருக்கு எழுதப்பட்டது. இரண்டாவதாகிய இது கர்னல் இரகுநாதருடைய தங்கையாகிய இராஜாம்பாளுக் கெழுதப்பட்டது. இவை யிரண்டையும் தாம் பார்க்கவேண்டிய அவசியமில்லை. இச்சீமாட்டியும் இப்போது இவற்றிலுள்ள விஷயங்களை யறியவேண்டிய அவசியமில்லை. இதோ இது உமது மனைவியாகிய இச்சீமாட்டிக்கு எழுதப்பட்டது. உமது விவகாரத்தைப்பற்றி எனக்கு எள்ளளவும் அவசியமில்லை. நீர் பின்னால் எத்தகைய தகாத மொழிகளையும் கூறலாகா தென்பதற்காக நீரே யிதை

வாசித்துப் பாரும்'' என்று பிரபுவினிடம் அதை யளித்தார்.

பிரபு அக்கடிதத்தை வாசித்துக்கொண்டே யிருக்கையில் ஜனரல் தம்மிடமிருக்கும் இரண்டு கடிதங்களையும் துண்டு துண்டுகளாகக் கிழித்து நெகிடித் தீயில் எறிந்துவிட்டு அவை சாம்பலாய்ப் போகின்றனவா வென்று கவனித்தார். உண்மையில் அவர், பிரபு அக்கடிதத்தை வாசிக்கும்போது அவர் முகத்தில் உண்டாகும்மாறுதலான குறிகளை நன்ருய்க் கவனித்துக் கொண்டிருந்தார்.

கடிதத்தை வாசிக்கத் தொடங்கு முன் பிரபுவின் முகத்தில் பெருந்திகிலான குறியிருந்தது. கடிதத்தை வாசித்துக்கொண்டு போகப்போக அத்திகில் கொஞ்சம் கொஞ்சமாக மாறி மனோ நிம்மதியான குறிதோன்றியது. கடைசியில் அக்கடிதத்தின் கடைசி பாகத்தைவாசித்ததே பிரபுவின் முகத்தில் ஒருவித ஆனந்தமானபிரகாசமே யுண்டாயிற்று. ஜனரல் யாவும் நன்ருய் உன்னிப்பாகக் கவனித்தார். பிரபு அதையறியவில்லை. பிரபு வாசித்த கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது :—

"என் அன்பார்ந்த தங்கைக்கு ஆசீர்வாதம். நான் உனக்குக் கூறவேண்டிய விஷயங்களைப்பற்றி இராமநாதர் கூறியிருப்பார். ஏழு நாட்கள் கழிந்தபின் நீ இதைப்பிரித்துப் பார்த்தால் இதற்குள்ளிருக்கும் கடிதங்களில் இரண்டு பெரிய இரகசியங்கள் இருக்கக் காண்பாய். அவற்றை நீ வெளிவிடாது காப்பாற்றுவாய் என்ற நம்பகம் எனக்குப் பூரணமாக வுண்டு. ஏழு நாட்கள் கழிந்து இக்கடிதங்களை நீ வாசித்துப் பார்த்ததும் நேராய் இராஜமாளிகைக்குச் சென்று அரசனைக் கண்டு அரசனுக்கெழுதிய கடிதத்தை யரசனிடம் கொடு. அரசன் அவசியம் அக்கடிதத்தில் கோரும் விஷயத்திற்குச் சம்மதிப்பார். ஒரு சமயம்

அவர் சம்மதிக்கமாட்டேனென்று கூறிவிட்டால் பிறகு இரொட்டிக்கிடங்கிற்குச் சென்று இராஜாம்பாளுக்கு எழுதப்பட்டிருக்கும் கடிதத்தை அம்மாதினிடமளித்துவிடு. அவ்வளவோடு உன் கடமை முழுமையும் செலுத்திவிட்டாய்.

இப்போது நீ செய்யும் உதவியால் ஒரு நிரபராதியை அநீதமான மரணத்தினின்றும் காப்பாற்றுவாய். ஏனெனில் கர்னல் இரகுநாதர் அக்குற்றத்தைச் செய்யவில்லையென்று நான் சத்தியமாகக் கூறுவேன். அவருடைய நடவடிக்கைகளை நான் நன்றாயறிவேன். ஆனால் சமயோசிதமான சாட்சியால் அவருக்கு மிக்க விரோதமாக விருக்கிறதென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இதில் இன்னும் வெளிவராத ஏதோ பெரிய மர்மம் இருக்கிறது. ஆனால் அந்தக் கர்னல் கொலை செய்யவில்லை. உண்மையான கொலையாளி என்றைக்கும் வெளிவராமலே யிருக்கலாகும். அதனாலேயே நிரபராதியாகிய ஒருவர் மரண தண்டனை யடைவது நீதியாகாது. நீ இதிற் கூறியபடி என் கோரிக்கைகளை நிறைவேற்றுவாய் என்று பூரணமாக நம்பி யிருக்கும்.

உன் அன்பார்ந்த சகோதரன்,

உக்கிரசேனன்''.

இக்கடிதத்தை வாசித்ததே பிரபுவுக்குத் திகிலனைத்தும் நீங்கின. ஜனரலுக்கு நமது இரகசியம் கொஞ்சம் கூடத் தெரியாது என்று கருதிச் சந்தோஷமடைந்தார்.

ஜெனரல் பிரபுவினிடமிருந்து அக்கடிதத்தை வாங்கிக்கொண்டு "பிரபுவே நான் தங்கள் மனைவிக்கு எழுதிய கடிதத்தால் உமக்கு எத்தகைய இடையூறுவது உமது மனைவிக்கு எள்ளளவு அகௌரவமாவது உண்டாகாதென்று இப்போது உமக்கு நன்றாக விளங்கிவிட்டதல்லவா?'' என்று

கூறிவிட்டு, அக்கடிதத்தை ஜகதாம்பாளிடமளித்து "சீமாட்டியே! இனி நீ இக்கடிதத்தை வாசித்துப்பார். நான் பிரபுவினிடம் இரண்டொரு வார்த்தை பேசவேண்டும்" என்று கூறிவிட்டுப் பிரபுவைச் சற்று தூரத்திலுள்ள சாளரத்தினருகிலழைத்துச் சென்று,

"பிரபுவே! நான் கூறுவதை வீண் பெருமையாக நினைக்கவேண்டாம். நான் நிச்சயமான பலமின்றி ஒருவரை வாயால் மிரட்டுகிறவனல்லவென்றும், எனக்குக் கெடுதி செய்ய முயல்பவன் ஒருபோதும் ஜெயமடையமாட்டானென்றும், அதோடு என் தண்டனையிலிருந்து தப்பமாட்டானென்றும் உனக்கு நன்ருய்த் தெரியும். நீ என்னுடைய விஷயங்களில் சிலவற்றை நேரில் கண்டிருக்கிருய். நான் பெரிய ஆபத்துகளில் ஒவ்வொரு சமயம் சிக்கிக்கொண்டு சுத்தப்பலனற்றவனுய்க் காணப்படுவேன். ஆனல் கட்டாயம் கூடிய சீக்கிரத்தில் அந்த ஆபத்து நீங்கி முன்னினும் அதிக பலமும் செல்வாக்கும் பெற்று வெளி வருவேன். இதை நீ யனுபவமாகக் கண்டிருக்கிருய். இப்போது நீ யென்னைப் பகிரங்க விரோதியாக்கிக்கொள்ள விரும்புகிருயா கூறு!" என்ருர்.

பிரபு மிக்க நடுக்கத்தோடு "இல்லையில்லை. எனக்கு அந்த எண்ணமில்லை. ஒருவரின் விரோதத்தைப் பெறுவதைவிட அவர்கள் சினேகத்தை விர்த்திசெய்துகொள்வதே நலம் என்பது என் அபிப்பிராயம்" என்ருர்.

ஜனரல் உக்கிரசேனர்:—"அப்படியாயின் பிரபுவே! அந்தப் புத்திப்படி இனியேனும் நடக்க முயலும். நான் சில நாட்களுக்குள் மேற்கு நாட்டிற்கு என் வேலைக்குச் சென்றுவிடுவேன். நான் செல்லுமுன் இங்கு எனக்குச் சினேகமான இரண்டொரு நண்பர்களுக்கு இச் சீமாட்டியை யறிமுகமாக்கி வைக்கப் போகி

றேன். அவர்கள் என்னைப்போலவே இச்சீமாட்டியின் க்ஷேமத்தைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துவருவார்கள். பிரபுவே! நான் பல்லாயிரம் மயில் தூரத்தில் இருந்தபோதிலும் எனக்கு உம்முடைய நடவடிக்கைகள் அப்போதைக்கப்போது எட்டும். நான் கண்டிப்பாய்க் கூறுகிறேன், நான் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் என் வஞ்சம் அகன்ற கடலைக் கடந்துவந்து உம்மை விடாது பற்றிக்கொள்ளும். இவ்வளவே நான் கூறவேண்டியது. இன்னொரு சங்கதி; அதாவது, இப்போது நான் இக்கடிதம் அனுப்பிய விஷயமாவது, இங்கு நடந்த சங்கதியாவது இந்த மாளிகையைவிட்டு வெளிச் செல்லலாகாது. பத்திரம்! பத்திரம்!!" என்று கூறிவிட்டு ஜகதாம்பாளை நோக்கி,

"சீமாட்டியே! இந்த உதவியை நீயே செய்துமுடித்ததுபோல் நான் உனக்கு நன்றி பாராட்டுகிறேன். நான் மங்களத்தீவில் பிராணபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு விவகாரத்தில் சிக்கிக்கொண்டேன். அதில் நான் இறந்து போனாலும் போகக்கூடும். அப்படிக்கின்றி உயிர் தப்பினால் ஒருவாரத்திற்குள் இங்கு வந்து சேரலாம் என்பது என் உத்தேசம். அதனாற்றான் உனக்கு இக்கடிதத்தை வரைய நேர்ந்தது. இனிப் போய்விடுகிறேன்" என்றார்.

அச்சமயம் ஒரு வேலைக்காரன் வந்து பிரபுவை நோக்கி "எஜமானே! யாரோ மூன்றுபேர் தூரத்திலிருந்து வந்தவர்களாகத் தெரிகிறது. தங்களை யுடனே காண விரும்புகிறார்கள்" என்றான். ஜனரல் "பிரபுவே! தாங்கள், தங்கள் சிநேகிதரைக்கண்டு பேசுவதற்கு நான் இடையூறாக இருக்கலாகாது. வந்தனம், வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

ஜனரல் வெளியிற் செல்லும்போது வந்த மூவரும் ஒரு அறைக்குள் செல்வதைக்கண்டார். ஆனால் கடைசியில் சென்றவனை மட்டும் யாரென்று உணர்ந்தார். அவன் உள்ளே சென்றதும் அவசரத்தோடு கதவை மூடித் தாளிட்டதைக்கண்டார். அவன் முன்பு தன்னிடம் வேலையாளாக விருந்து கர்னல் குமரவேலுக்கு உளவறிந்துபோய்த் தன் நடவடிக்கைகளைக் கூறியவனும், கர்னல் குமரவேலின் ஆட்காரனுமாகிய அப்பாசாமி என்ற வாலிபனே. அவர்கள் மூவரும் அவ்வாறு இரகசியமாகவும் எச்சரிக்கையோடும் உள்ளே சென்றதில் ஜனரலுக்கு வியப்பும் சந்தேகமுமுண்டாயின. அவர் ஒருவருக்கும் புலப்படாவண்ணம் நடக்கும் ஒவ்வொரு அற்பவிஷயத்தையும் கண்டறிந்துகொள்ளும் மிக்க சூக்கும அறிவுடையவர். ஆகையால் "ஓகோ! ஏதோ மர்மமான காரியம் நடக்கிறது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

அச்சமயம் பிரபுவின் வேலைக்காரரில் ஒருவன், மூவர் வந்திருப்பதாய்ப் பிரபுவினிடம் கூறிய அதே ஆள், ஜனரலின் குதிரையைப் பிடித்து வந்து வெளியில் நிறுத்தினான். ஜனரல் "தம்பி! நீ மிக்க நல்லவனென்று புலப்படுகிறது. நான் கேட்கும் ஒரு விஷயத்தைப்பற்றிக் கொஞ்சம் கூறுவாயென நம்புகிறேன்" என்று கூறிக்கொண்டே அவன் கரத்தில் இரண்டு பவுன்களை வைத்தார்.

அவன் மிக்க சந்தோஷமடைந்து "பிரபுவே! தங்களுக்குப் பணிசெய்வதே என்போன்றவனுக்கு மிக்க கௌரவம். தாங்கள் என்ன கேட்டாலும் மறைக்காமல் கட்டாயம் கூறுவேன்" என்றான்.

ஜனரல்:—நண்பனே! நீ கூறுவதுமட்டும் போதாது. நம்மிருவர்க்கும் நடக்கும் சம்பாஷணை யொருவர்க்கும் தெரியலாகாது.

வேலைக்காரன்:—என் ஆவி நீங்கினும் வெளியிடேன்.

ஜனரல்.—பேஷ்! நீ சத்தியவான். நீ என்னிடம் இன்னும் அனேக பவுன்களைச் சம்பாதிப்பாய். இப்போது மூவர் வந்திருப்பதாய்க் கூறினையே அவர்கள் யார் தெரியுமா?

வேலையாள்:—அவர்களில் ஒருவன் அப்பாசாமி என்ற வாலிபன். அவன் கர்னல் குமரவேலின் கையாளாக விருந்தான். இரண்டாவது ஆள் கர்னல் குமரவேல்.

ஜனரல்:—சரி அப்படித்தான் கருதினேன். மூன்ருவது ஆள்?

வேலையாள்:—அவன் புதுமனிதன். வயது முதிர்ந்தவன். அவர்கள் பேசிய இரண்டொரு வார்த்தைகளால் அவன் பாஞ்சால நாட்டானென்று தெரிகிறது.

ஜனரல்:—சரி நீ இன்னும் சில பவுன்கள் சம்பாதிக்கப் பிரியப்பட்டால் நான் கூறுகிறபடி செய்வாயா?

வேலையாள்:—ஆ! மிக்க சந்தோஷமாகச் செய்வேன். தங்கள் கட்டளையை நிறைவேற்றிய பின்பே எனக்குப் பணம் கொடுங்கள்.

ஜனரல்:—“ஆ! இதுவே நீ உண்மையானவன் என்று தெரிவிக்கிறது. இதோ இந்த இரண்டு பவுன்களையும் இனமாய் வைத்துக்கொள். நீ செய்யவேண்டிய தென்னவெனில், இவர்கள் இங்கிருந்து புறப்படும்போது அவர்கள் பின்னல் இரகசியமாகத் தொடர்ந்துபோய் அவர்கள் எங்கு செல்கிருர்கள்? எங்கு தங்குகிருர்கள் என்று உன்னல் கூடியவரையில் அவர்கள் சங்கதியை யறிந்துகொண்டு நாளைப் பகல் சரியாகப் பன்னிரண்டுமணிக்கு என் மாளிகையில் வந்து நேராக என்னிடம் தெரிவிக்கவேண்டும். மிக்க ஜாக்கிரதையாக அவர்களுக்குத் தெரியாமலே

அறிந்து வரவேண்டும். உனக்குத் திருப்தியான பரிசளிப்பேன் என்று கூறவேண்டியதில்லை'' என்றார்.

வேலைக்காரன் அவ்வாறே செய்வதாய்க் கூறிச் சென்றபின் ஜனரல் அங்கிருந்து தமது மாளிகையை நோக்கிச் சென்றார்.

ஜனால் உக்கிரசேனர் எதிரிலிருப்போர் அறியாமலே நடக்கும் ஒவ்வொரு அற்ப விஷயத்தையும் நன்றாய் அறிந்துகொண்டு அவற்றின் மூலமாக மற்ற விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளும் மிக்க சூக்கும அறிவுடையவர். ஆகையால் பிரபு மிக்க கலவரத்தோடு "என்னைப்பற்றி ஏதேனும் தெரிந்திருந்தால் அதைக்கூறிவிடும், மற்ற விஷயங்களை வீணாகப்பேசவேண்டாம்'' என்று கூறியபோதே, அப்போது அதை யறிந்தவர்போலாவது சந்தேகித்தவர் போலாவது வியப்புக்குறி, திடுக்கிடுதல் முதலிய எவ்வித உணர்ச்சியும் வெளியிடாவிடினும், பிரபு ஏதோ பெரிய மர்மமான குற்றத்தில் சம்பந்தப்பட்டு அதற்தாகப் பயந்துகொண்டிருக்கிறார் என்று அறிந்துகொண்டார். அதன் பிறகு கடிதத்தை வாசித்தபோது அதன் கடைசி பாகத்தை வாசித்ததும் திகில் நீங்கிச் சந்தோஷமடைந்ததைக் கண்டதும் "ஓகோ பிரபு திகில்பட்டுக்கொண்டிருக்கும் விஷயம் எவ்விதத்திலோ கர்னல் இரகுநாதர் விவகாரத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற தென்றுணர்ந்தார். விஷயம் இன்னதென்று தெரியாவிட்டாலும் அவர் மனதில் மட்டும் அச்சந்தேகம் உறுதியாய்விட்டது.

அதனால் மூன்று ஆசாமிகள் இரகசியமாகப் பிரபுவின் மாளிகைக்குள் நுழைவதைக் கண்டதே ஏதோ பெரிய மர்மமான விவகாரம் நடக்கிறதென்றுணர்ந்தார். இத்தகைய விஷயங்களால்தான் ஜனரல் அவர்களைப்பற்றி

நன்றுயறிந்துகொள்ளக் கருதிப் பிரபுவின் வேலைக்காரனுக்குப் பணம் கொடுத்துத் தமக்கு உளவாளியாக இருக்கும்படி செய்தார்.

---

## 59-வது அத்தியாயம்.

ஜெனரல் உக்கிரசேனரும் உலகநாயகனும் லாயர் மாசிலாமணிப்பிள்ளையைக் காணல்—அதிசய உளவுகள்—கர்னல் குமரவேலும் ஞானப்பிரகாசம் குருவும் அப்பாசாமியும்—ஹோட்டலில் சம்பாஷணை.

---

மறுநாள் காலை ஜனரல் உக்கிரசேனரும் உலகநாயகனும் கர்னல் இரகுநாதருக்காக அமர்த்தப்பட்டிருக்கும் வக்கீலாகிய மாசிலாமணிப் பிள்ளையிடம் சென்றார்கள். வக்கீல் இவர்களைக் கண்டதே மிக்க சந்தோஷத்தோடும் ஆவலோடும் "வாருங்கள் ஜனரல், வாரும் உலகநாயகரே'' என்று நல்வரவு கூறினர்.

ஜனரல் உக்ரசேனர் வக்கீலை நோக்கி, "நண்பரே! நமது நண்பர் உலகநாயகர் இப்போது ஸர்தார் உலகநாயகர். இவர் மங்களத்தீவில் நடந்த யுத்தத்தில் காட்டிய வீர தீரச்செயல்களுக்காக, எனக்கிருக்கும் அந்தஸ்தின் அதிகாரத்தால் இவருக்கு யுத்தகளத்திலேயே அப்பட்டத்தை யளித்தேன். இவ்வாறே மேஜர் இலக்ஷ்மணனுக்கும் ஸர்தார் பட்டம் அளித்திருக்கிறேன்'' என்றார்.

மாசிலாமணிப்பிள்ளை:—அங்கு நடந்த ஆச்சரியமுள்ளவையும் நெஞ்சு திடுக்கிடும்படியானவைகளுமாகிய சம்பவங்களையும், யுத்தத்தில் நமது ஸர்தார் உலகநாயகர் காட்டிய வீரதீரத்தையும்பற்றி முன்னமே இங்கு சமா

சாரம் எட்டியது. அதனால் நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கோரளவில்லை'' என்றார்.

ஜனரல் உக்கிரசேனர் "சரி இனி விவகாரத்தைக் கவனிப்போம். விசாரணை நாளைக்கல்லவா?'' என்றார். வக்கீல் ஆம் என்றதே ஜனரல் "மரணவிசாரணையில் ஏற்பட்ட பத்திரங்களை யெல்லாம் கொஞ்சம் காட்டுங்கள் பார்ப்போம்'' என்றார். வக்கீல் உடனே தன் மேஜையைத் திறந்து ஒரு கடிதக்கட்டை ஜனரலிடமளித்தார்.

ஜனரல் அதை வாங்கிக்கொண்டு "நான் விசுவநாதன் என்பவனைப் பற்றி விசாரிக்கும்படி கோரிக்கொண்டேனே, அச்சங்கதி யென்ன?'' என்று வினவினார்.

மாசிலாமணிப்பிள்ளை:—நான் அதற்காக நம்பிக்கையுள்ள ஒரு ஆளை இங்கிருந்து பாஞ்சால நாட்டிற்கனுப்பினேன். அவனால் இந்த விசுவநாதனைப்பற்றிய சங்கதிகள் தெரியவந்தன. விஸ்வநாதன் நம்மூரானே. இங்கு கடன்பட்டுவிட்டு வாரன்டிற்ககப்படாமல் பாஞ்சால நாட்டிற் கோடிப்போய் அதன் துறைமுகத்திலுள்ள நகரில் வசித்திருந்தான். அவன் இங்கு வந்து கொலையுண்டதற்குச் சில தினங்களுக்கு முன்பு அவனும் முன்பு குருத்தொழிலிலிருந்து நீக்கப்பட்ட ஒரு வயோதிக மனிதனும் துறைமுக நகரிலிருந்து பாஞ்சால நாட்டின் இராஜதானியாகிய பருதிபுரத்திற்குச் சென்றிருக்கிறார்கள்...'' என்றபோது, ஜனரல் அக்குருவின் பெயர்? என்றார்.

வக்கீல்:—அவர் பெயர் ஞானப்பிரகாசம். அவர் சுமார் பதினேழு பதினெட்டு வருடங்களுக்குமுன் துறைமுக நகரத்திற்குச் சற்று தூரத்திலிருக்கும் ஒரு கன்னிகாமடத்தில் பாபமன்னிப்பளிக்கும் குருவாக விருந்தாராம். அவரும் விசுவநாதனும் பருதிபுரத்

தின் ஒரு ஹோட்டலில் தங்கி யிருந்தார்கள். நான் அனுப்பிய ஆள் அந்த ஹோட்டலைக் கண்டுபிடித்து அங்கு சென்று விசாரித்தான். அவர்களிருவரும் அந்த ஹோட்டலில் தங்கிய தினம் பிற்பகல் விசுவ நாதன் எங்கோ வெளியில் சென்றபோது குருமட் டும் ஹோட்டல் அறையில் இருந்தார். அச்சமயம் தற்செயலாய்க் கர்னல் குமரவேல் என்பவன் அங்கு சென்று குருவினிடம் ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண் டிருந்தான். அப்போது திடீலென்று போலீஸ்காரர் வந்து அவர்கள் இருவரையும் பிடித் துப்போய்ப் பருதிபுரத்திலுள்ள பாதாள சிறைச் சாலையி லடைத்துவிட்டார்கள்...'' என்றார்.

ஜனரல்:—''இச் சம்பவத்தைப்பற்றித் தாங்கள் என்ன யூகிக்கிறீர்கள்?'' என்றார்.

மாசிலாமணிப்பிள்ளை:—பின்னால் சங்கதி தெரியவந்தது. அதாவது விசுவநாதனையும் குருவையும் சிறைசெய் யவே அவர்கள் வந்தார்கள். விசுவநாதன் அச்சம யம் அங்கில்லாமல் கர்னல் குமரவேல் இருந்ததால் தவறாக அவனைப் பிடித்துக்கொண்டு சென்றார்கள். அதெப்படித்தெரிந்ததென்றால் பிறகு ஒருமணிநேரங் கழித்துப் போலீஸார் திரும்பி அந்த ஹோட்டலுக் குச் சென்று ஹோட்டல்காரனை விசாரித்திருக்கிறார் கள். விசுவநாதனைத் தேடினார்கள். ஆனால் அவன் அவர்கள் சிறைசெய்யப்பட்ட ஐந்து நிமிடங்களுக் குப்பின் ஹோட்டலுக்குத் திரும்பிச்சென்று சங்கதி யைக் கேள்விப்பட்டதே உண்மையை யூகித்துக் கொண்டு உடனே அந்நகரைவிட்டு ஓடிவந்துவிட் டான். அங்கு அச்சம்பவம் நடந்த தினத்தையும் விசுவநாதன் இங்குவந்துசேர்ந்ததினத்தையும் கணக்

கிட்டுப் பார்த்தால், அவன் அங்கு தப்பித்துக்கொண்டதும் நேராக இங்கு ஓடிவந்துவிட்டிருக்கிறான் என்று தெரிகிறது. வந்ததினமே அரசனைக் காணச் சென்றிருக்கிறான்'' என்றார்.

ஜனரல் உக்கிரசேனர் வக்கீல் கொடுத்த பத்திரங்களையெல்லாம் வாசித்துப் பார்த்தபின், அவரை நோக்கி "தாங்கள் கொலையாளி யுபயோகித்த கத்தியைப்பற்றி வெளியிட்ட குறிப்புகள் மிக முக்கியமானவை. இத்தகைய பெரிய விஷயங்களில் அற்ப சங்கதிகளைக் கூட அலக்ஷியம் செய்யலாகாது'' என்றார்.

**வக்கீல்:**—ஆம் ஆம். ஒரு நிரபராதியின் பிராணன் ஆபத்திலிருக்கையில் யாவற்றையுமே கவனிக்கவேண்டும்.

**ஜனரல்:**—அதில் தாங்கள் அக்கத்தி ஒரு பெரிய மனிதன் உபயோகிக்கும் கத்தியல்லவென்றும், வேலைக்காரனாகிய காலாள் வைத்திருக்கும் கத்தியென்றும் வெளியிட்டது மிக்க விசேஷமானது. ஆ! அந்தக் கத்தி எப்படிப்பட்ட கத்தியென்று கொஞ்சம் விவரம் கூறக்கூடுமோ?'' என்றார்.

வக்கீல் விவரமாக அதன் அடையாளங்களைக் கூறியதே ஜனரல் ஒரு விநாடி ஏதோ சிந்தித்துப் பிறகு "அக்கத்தியைப் பார்க்க விரும்புகிறேன்'' என்றார்.

**வக்கீல்.**—"ஆகா பார்க்கலாம். துரைத்தன வக்கீலிடம்தான் அது இருக்கிறது. சினேகபாவமாகச் சற்று பார்வையிட அனுப்புவார்'' என்று கூறிவிட்டு உடனே தன் லிகிதரை யழைத்துக் கத்தியை வாங்கி வரும்படி யனுப்பினார்.

உலகநாயகன் ஜனரல் உக்கிரசேனருடைய முகத்தை யுற்றுநோக்கிக்கொண்டிருந்தான். அவருடைய முகக்குறியால் ஒன்றும் அறிவதற்கில்லை. பத்து நிமிடங்களுக்

குள் இலிகிதர் கத்தியை வாங்கிக்கொண்டு வந்தார். ஜனரல் அதை வாங்கிக்கொண்டு உற்று நோக்கினார். அச்சமயம் உலகநாயகனும், வக்கீலும் மிக்க ஆவலோடு அவர் முகத்தை நோக்கினார்கள். முதலில் அவர் முகத்தில் குபீ லென்று ஒரு பிரகாசம் தோன்றியது. மறுநிமிடம் சாதாரணமாய்விட்டது. அவர் கத்தியை வக்கீலிடமளித்து விட்டு, "உலகநாயகம்! நான் இதுகாறும் கூறியதைவிட இப்போது இன்னும் உறுதியாகக் கூறுகிறேன்; உன் மாமனார் கட்டாயம் காப்பாற்றப்படுவார். இதுகாறும் நான் அவர் ஆபத்தை நீக்குவதாகமட்டும் வாக்களித்திருந்தேன். இப்போது அவர் நிரபராதியென்றும் நிரூபித்து அவர் எள்ளளவு கௌரவத்தாழ்வுமின்றி வீட்டிற்குத் தலைநிமிர்ந்து வரும்படிச் செய்யவேனென்று வாக்குறுதி கூறுகிறேன்" என்றார்.

உலகநாயகன் சந்தோஷத்தால் கூச்சலிட்டு ஜனரல் உக்கிரசேனர்முன் முழங்காலிட்டுப் பணிந்து அவர் கரங்களைப்பற்றிக்கொண்டு மிக்க நன்றியான வார்த்தைகளைக் கூறினான். ஜனரல் உக்கிரசேனர் "உலகநாயகம்! எழுந்திரு. உடனே சென்று நான் கூறிய சங்கதிகளை யுன்மனைவி மாமியார் முதலியவர்களிடம் கூறிவிட்டு உன் மாமனாரிடமும் கூறு. அவரிடம் 'நாளைக்கு நியாயசபையில் அவர் வந்து நிற்கவேண்டும். விசாரணை முதலிய எல்லாச் சடங்குகளும் நடந்தாலும் நடக்கும். ஆயினும் நாளை ஆறுமணிக்கு அவர் எள்ளளவு அகௌரவமுமின்றி வீடுவந்து சேருவார்' என்று நான் கூறியதாகக் கூறு. நான் கூறும் வார்த்தை தவறாது. போ சீக்கிரம்" என்றார்.

உலகநாயகன் மறுபடி யவர் கரங்களைப்பற்றிக் கொண்டு வந்தனமளித்துவிட்டுக் கண்களில் நீர் துளித்துக் கொண்டே சென்றான்.

சென்னை-600 008
186483

# மின்சாரமாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியார்வர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம் வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டு விடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350 பக்கங்களுக்குமே லுடையது.

விலை ரூபா **1—8—0.**

புது! துப்பறியும்!! நாவல்!!!

## வெளியாய் விட்டது.

# மஞ்சள் அறையின் மர்மம்

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால்வரையப்பட்டது.

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச்செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமர்த்தியச்செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சாகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1 8 0 தபால் கூலி பிரத்யேகம்.

---

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை, மதராஸ்.

# “ஆனந்தபோதினி”

**ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இவ்வுலக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புதுநாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| சற்கோட்டை ... | 2 | 0 | பத்மாஸினி ... | 0 | 14 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் (மறுபதிப்பில்) | | | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 | பவளத்தீவு-அச்சில் | | |
| ஆனந்தவல்லி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள் | 1 | 12 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| | | | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | ஷை ஸ்கூல் பதிப்பு ... | 0 | 7 |

விலாசம்: மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the “Ananda Bodhini” Power Press, Madras.